# இலங்கை இந்தியர்

# சரித்திரச்சுருக்கம்

# CEYLON - INDIANS

# ON HISTORICAL OUTLINE

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "சமர்ப்பணம்"

திருவாளர் சௌமிய மூர்த்தி தொண்டமான்
அவர்களின் சிறந்த தன்னலமற்ற பொது
சேவையின் சின்னமாக இப்புத்தக
வெளியீட்டை சமர்ப்பிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இந்தியர்

# சரித்திரச் சுருக்கம்

(CEYLON INDIANS-ON HISTORICAL OUTLINE)

ஆக்கியோனும பிரசுரிப்பாளரும்

கலகா பெ. தங்கராசா

கிடைக்குமிடம்

MALATHIE PUBLISHING HOUSE

57, AMPITIYA ROAD, KANDY

( 1968 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை ஆசிரியருடையது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல்வேண்டும். —பாரதி—

எனது மாணவர் பி தங்கராஜாவின் பெருமுயற்சியில் வெளியீடான இந்த "இலங்கை இந்தியர் சரித்திரச் சுருக்கம்" உண்மையிலேயே பாரதியின் பாடல் வரிகளைத்தான் எனக்கு நினைவூட்டுகின்றது. தமிழில் நல்ல ஆய்வு நூல்கள் அதிகம் இல்லை என்ற மனக்குறை பலருக்கும் இருந்துவருவது யாவருமறிந்த வெளிப்படையான உண்மை. இந்த உண்மையை ஓரளவு பொய்ப்பிக்கும் நோக்கில் தான் இதனைத் தங்கராஜா வெளியிட்டிருக்கின்றார். என நான் எண்ணுகின்றேன். தமிழ்மொழியில் ஒரு ஆய்வு நூலை வெளிப்போந்த தோடு மட்டுமன்றி, தமிழ் மக்களின் வாழ்வுப் பெருவழியில் ஒரு பகுதியின் வரலாற்றையும் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அளித்தபெருமை என் மாணவர்க்குரியது என்பதால் இதுபற்றி நான் பேரானந்தமும், பெருமிதமுங்கொள்கின்றேன்.

இந்நூல், இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களின் முழுவரலாற்றையும் நல்ல ஆய்வுக்கண்ணோட்டத்திலும், வரலாற்றுக் கண்ணோட்டத்திலும் மிக அணுகி ஆராய்ந்து விளங்குகின்றது. பெருமுயற்சியும், பெருஞ்சிரமமும் எடுத்துப் பல பெரும் நூல்களின் துணைக்கொண்டு தனது கருத்துக்களுக்கான ஆதாரங்களைத் தேடிப் பெற்றுச் சேர்த்துள்ளார் என்பது இதன் ஒவ்வொரு வரிகளிலும் புலப்படுகின்றன. சலியாத உழைப்புடனும், உலையாத ஊக்கத்துடனும் இப்பெரும்பணியை இவர் மேற் கொண்டிருக்கிறார் என்ற உண்மை இந்நூலின் ஒவ்வொரு எழுத்திலும் புலனாகின்றது. இதன் ஒவ்வொரு பக்கங்களிலும் ஒரு நல்ல வரலாற்று நூலின் பெருமணம் எங்கும் பொங்கிப் பரவிநிற்கின்றது

ஈழத்தின் பொருளாதாரப் பேற்றிற்கு ஆணிவேராக இருக்கும் மலையகத்தின் வளத்திற்கும், வனப்பிற்கும் காரணகர்த்தர்களாகிய மலையகத் தமிழர்களின் வரலாற்றை எழுதியதன் மூலம் திரு தங்கராஜா அவர்கள் எம்மக்கள் மத்தியில் — அவர்களின் அன்புப் பெருமனங்களில் அழியாத ஒரு இடம்பெற்றுவிட்டார். யாரும் அணுக விரும்பாத, எண்ணிப்பார்க்கவும், நெருங்கிப்பழகவும் வெட்கப்படும், மனங்கூசும் ஒரு ஒதுக்கப்பட்ட சமுதாயத்தில் ஒரு இளம் இரத்தம் துள்ளியெழுந்து தனது சமுதாயத்தின் பெருமைகளை பறைசாற்றியது. பெருமைக்கும், பேற்றிற்கும் உரிய செயல் என்றே கருதுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இலங்கை இந்தியர் சுருக்கத்தோடு இணைந்ததாகக் "காலம் கதை சொல்லும்" என்ற தலைப்பில் கி. மு. 2000 தொடக்கம் இன்றுவரையுள்ள இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற காலங்களையும், அக்காலங்களில் நடைபெற்ற வரலாற்றுச் சம்பவங்களையும், நிகழ்ச்சிகளையும் தொகுத்துக் கோவையாகத் தந்துள்ளார். இது இலங்கை வரலாற்றைக் கற்க விழையும் மாணவர்களுக்கும், ஆய்வு நடத்த விரும்புபவர்களுக்கும் ஒரு கையடக்க வரலாற்றுக்குறிப்பாக அமைந்துள்ளது. இம்முயற்சி பலராலும் பாராட்டப்படக்கூடிய ஒரு பெருமுயற்சி என்பதில் சற்றும் சந்தேகமில்லை.

முடிவாக இந்த இலங்கை இந்தியர் சரித்திரச் சுருக்கத்தை நான் வாசித்துமுடித்தபோது உண்மையிலேயே என்மனம் பூரிப்பால் நிறைவு பெற்றிருந்தது. எனது மனத்தடியில் விளைந்த பலநாள் லட்சியக் கனவுகள் என்னால் உருவாக்கப்பட்ட மாணவனால் நனவாகிவிட்ட பெருமையில் மூழ்கி நிற்கின்றேன். திரு. பி தங்கராஜாவைப்போன்ற பல நூறு இளைஞர்கள் நம் மலையகத்தில் தோன்றி இதுபோன்ற நாட்டுக்கு நன்மை பயக்கும் பெரும்பணியில் ஈடுபட்டு நம் சமூகத்திற்குப் பணி செய்ய முன்வரல் வேண்டும். இவரது இந்த முயற்சி பல வழிகளிலும் சிறப்படைந்து பெருமையடைய எனது ஆசிகள் என்றுமுண்டு. திரு. தங்கராஜா நல்லதொரு செயலைத் தொடங்கியிருக்கின்றார். அதன் முடிவும் நல்லதாக அமைந்து பூரணத்துவம் பெற எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பானாகட்டும்.

இவ்வண்ணம்

பா. த. இராஜன் ஜே. பி.

21-8-1968 அதிபர்

அசோகா மாணவர் ஹாஸ்டல், கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"கற்றுக்கண் அஞ்சான் செலச் சொல்லிக் காலத்தால்
தக்கது அறிவதாம் தூது - குறள் - அதி-69

இலங்கையில் வாழும் இந்திய மக்களின் மத்தியில் சரித்திர அடிப்படையில் தங்களது முன்னோர்களின் வாழ்க்கையையும் அவர்கள் இலங்கை தோட்டங்களில் தொழில் செய்ய தோட்ட முதலாளிமார்களினால் கொண்டுவரப்பட்ட விதத்தையும் பற்றி மிகவும் தெளிவாக அறிந்துகொள்ள நூல்கள் இல்லாமலிருக்கின்றது. இப்பெரும் குறையை நிவர்த்திசெய்யுமுகமாக என் அறிவிற்கு கிடைத்த பல குறிப்புகளையும் தொகுத்து 'இலங்கை இந்தியர் சரித்திரச் சுருக்கம்' என்ற பெயரில் இந்நூலை வெளியிட முன்வந்துள்ளேன். இந்நூலில் நான்கு அத்தியாயங்களை அடக்கி இலங்கை இந்தியர் வரலாறு, அரசியல் ஈடுபாடு, சமுதாய வாழ்வு, காலம் கதைசொல்லும் என்ற தலைப்புக்களின் கீழ் எல்லோரும் புரிந்துகொள்ளக் கூடிய அளவில் விடங்களை கூறமுற்பட்டுள்ளேன். இவ்வெளியீட்டிற்கு 'முத்திரையாக' மலையக மாணவ மன்னன் திரு. P. T. ராஜன், J. P. அவர்கள் அணிந்துரை அளித்து இப்புத்தகத்தின் சிறப்பைப் பற்றிய உண்மைகளை மனதார கூறுகின்றார்கள்.

'சரித்திரம்' என்பது உண்மையிலேயே கடந்த காலங்களில் நடந்த சம்பவங்களை ஆதாரத்தோடு வரிசைப்படுத்திக் கூறும் கல்வியாகும். இதனடிப்படையிலேயே பல இனமக்களும் தங்களுக்கென சரித்திரம் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தியர்களில் இதற்கு முன்னால் சிலர் சரித்திரம் எழுத முற்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது நான் எழுத முற்பட்டிருக்கும் 'இலங்கை இந்தியர் சரித்திரச் சுருக்கம்' சிறிதளவிலாவது இலங்கையில் வசிக்கும் இந்திய மக்களுக்கு அவர்களின் வரலாறு அறிய துணையாயிருக்கும் என்றக்கருத்தில் இந்நூலை வெளியிட முன்வந்துள்ளேன். இவ்வெளியீட்டில் திருத்தங்கள் ஏதும் செய்ய இருப்பினும் அல்லது புதிதாக ஏதேனும் கூற இருப்பினும், இந்தியர்களின் நல்வாழ்வில் அன்புகாணும் நண்பர்கள் இவைகளைப் பற்றியதெல்லாம் எனக்குக் கூறி, இப்புத்தக வெளியீட்டிற்கு ஆதரவளிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கலகா,　　　　　　　　　　　　　　இங்ஙனம்

21-8-1968　　　　　　　　　　　　பெ. தங்கராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இந்தியர் சரித்திரச் சுருக்கம்

இச்சிறுநூல் எழுதுவதற்கு ஆதாரமாக அமைந்துள்ள புத்தகங்கள், அரசாங்க அறிக்கைகள், சட்டங்கள் ஆகியவற்றின் விபரம் கீழ்த்தரப்படுகின்றது.


A Description of Ceylon by James Cardinar A. M. Vol I & II (1801)

Ceylon by Sir James Emerson Tennet K.C.S. LLD (1859) Vol-i&ii

History of Ceylon by Donald Abeysekere *(1911)*

Yalpana Vaipava Malai *(1897)* English translation by C. Britto

Ceylon History by John Marshall

Hansard of the House of Representatives relating to discussion on Indian & Pakistani Residents (Citizenship) Bill *1949*

Ferguson's Ceylon Directory *1929*

Ceylon under the British by Dr G. C. Mendis 1944

Indo-Ceylon Relations Exploratory Conference SPP VIII of 1941

Indo-Ceylon Relations SPP XXVIII of 1941

Indo-Ceylon Relations SPP III 1943

Correspondence Relating to the Citizenship status of Indians Resident in Ceylon SPP XXII of 1948

Indo-Ceylon Relations Exploratory Conference SPP x of 1941

Indo-Ceylon Relations Exploratory Conference SPP ix of 1941

Ceylon citizenship Act No. 18 of 1948

Indian & Pakistai Residents (citizenship) Act 3 of 1949

Hansard of the House of Representatives relating to discussion on Nehru Kotalawela agreement of Oct, 1954.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Indian & Pakistani (Parliamentary Representation) Act No. 36 of 1954 (Now Repealed)

Indo-Ceylon Agreement Implementation) Act No. *14* of *1967*

Report of the Kandyan Peasantry Commission SPP XVIII of *1951*

Green Book-*1923*- A times of Ceylon publication

Ceylon Workers Congress Annual Report *1964/65*

The Minimum Wages (Indian Labourers) Ordinance (Cap *135*)

Report of an Inquiry into the Family Budget of Indian Estate Labourers SPP XXVI of *1941*

Correspondence relating to Indian Immigrant Labour (Estimates *1923/24*) XV of *1923*.

India-Treaty Series Mo I of *1954* Sirimawo-Sastri Pact)

(Nehru-Kotalawela agreement of January *1954*)

India-Treaty Series No 5 of *1964*

Papers relating to the Education of Immigrant Tamil children Employed on Estates SPP V of *1905*

Report of the Commissioner on Elementary Education in Ceylon SPP XXVIII of *1905*

Report of a Commission on Immigration into Ceylon (Jackson Report) SPP iii of *1938*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## முதலாம் அத்தியாயம்

## இலங்கை இந்தியர்


| தலைப்பு | | பக்கம் |
|---|---|---|
| 1 | பழங்கால வரலாறு | 1 |
| 2 | போர்த்துகேயர் காலம் | 3 |
| 3 | ஒல்லாந்தர் காலம் | 3 |
| 4 | கண்டிய மன்னர்கள் | 3 |
| 5 | ஆங்கிலேயர் காலம் | 4 |
| 6 | மலைநாட்டு இந்தியர் | 5 |
| 7 | இந்தியர் தோட்டங்களில் தொழில் புரிய வந்தமுறை | 6 |
| 8 | வைத்திய வசதி | 9 |
| 9 | இந்தியர் வருகை தடைசெய்தல் | 9 |
| 10 | இந்தியர் ஜனத்தொகை | 10 |
| 11 | இலங்கை இந்தியப் பிரச்சினை | 10 |
| 12 | பாஜ்பாய் - சேனநாயகா பேச்சுகள் | 10 |
| 13 | மீண்டுமோர் பேச்சு | 12 |
| 14 | இரப்பர் தோட்டங்களுக்கு தொழிலாளர் | 12 |
| 15 | இந்தியர் பாகிஸ்தானியர் சட்டம் | 13 |
| 16 | நாடற்றவர்கள் | 14 |
| 17 | இந்தியருக்குத் தனித்தேர்தல் தொகுதி | 15 |
| 18 | திரு. S. W. R. D. பண்டாரநாயகா | 15 |
| 19 | பொதுத்தேர்தல் | 15 |
| 20 | திருமதி. பண்டாரநாயகா | 16 |
| 21 | தேசிய அரசாங்கம் | 16 |
| 22 | இலங்கை-இந்திய வர்த்தக ஒப்பந்தம் | 17 |


## இரண்டாம் அத்தியாயம்

## இலங்கை அரசியலும் இந்தியர் நிலையும்


| தலைப்பு | | பக்கம் |
|---|---|---|
| 1 | சென்னை அரசின் கீழ் இலங்கை | 17 |
| 2 | காலனியாட்சி | 18 |
| 3 | மாட்சிமை தங்கிய அரசசபை (His Majesty's Council) | 18 |
| 4 | கோல்புருக் - கேமரன் வருகை | 18 |
| 5 | புதிய சட்ட சபையும் நீதிமன்றமும் | 18 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 6 | பொதுஜன வாக்குரிமை | 18 |
| 7 | புதியதோர் சட்டசபை | 18 |
| 8 | மீண்டும் புதிய சட்டசபை | 19 |
| 9 | இந்தியர் பிரதிநிதித்துவம் | 19 |
| 10 | டோனமூர் கமிஷனர்கள் வருகை | 19 |
| 11 | இந்தியர் பிரதிநிதித்துவம் | 19 |
| 12 | சோல்பரி கமிஷனர்கள் வருகை | 19 |
| 13 | இந்தியர் பிரதிநிதித்துவம் | 19 |
| 14 | இந்தியர் வாக்குரிமை பறிபோதல் | 20 |
| 15 | மீண்டும் இந்தியர் நியமனம் | 20 |


மூன்றும் அத்தியாயம்

# இந்தியர் சமுதாயம்


| தலைப்பு | | பக்கம் |
|---|---|---|
| 1 | இந்தியரின் வாழ்க்கைப் பிரச்சினை | 21 |
| 2 | மகாத்மா காந்தி | 21 |
| 3 | இலங்கை இந்தியக் காங்கிரஸ் | 21 |
| 4 | பெயர் மாற்றம் | 21 |
| 5 | தொழிற்சங்கத்தில் பிளவு | 22 |
| 6 | அரசியல் நிதி | 22 |
| 7 | இலங்கைப் பிரசாவுரிமை சட்டம் | 22 |
| 8 | இலங்கையின் சுதந்திரம் | 22 |
| 9 | குடியிருப்பு | 22 |
| 10 | தோட்டத்தொழிலாளரும் உள்ளூராட்சி மன்றங்களும் | 23 |
| 11 | இந்தியத்தொழிலாளர் குடியேற்றும் சபை | 23 |
| 12 | சம்பள நிர்ணயச்சபை | 23 |
| 13 | தோட்டப் பயிர்கள் | 23 |
| 14 | தொழிலாளர் கல்வி | 24 |
| 15 | தொழில் கோடுகள் | 24 |
| 16 | மலைகள் கதை சொல்லும் | 24 |
| | காலம் கதை சொல்லும் | 26–30 |
| | இணைப்புகள் i—v | 31–33 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் அத்தியாயம்

# இலங்கை வாழ் இந்தியர்

## 1 இலங்கை பழங்கால வரலாறு:

பன்னெடுங்காலந்தொட்டே ஈழநாடு தாய் நாடான இந்திய நாட்டினோடு தொடர்புடையதாய் இருந்தது.

இலங்கையைப் பற்றி முதன் முதலில் அறிந்தவர்கள் இந்திய தேசத்திலிருந்து வியாபாரத்திற்காக வந்த வியாபாரிகளே. இவர்கள் ஆதியில் யக்கர்களோடு வியாபாரத் தொடர்பு வைத்திருந்தனர். இவ் வியாபாரிகளே முதன் முதலில் இலங்கையைப் பற்றியும் இலங்கையில் வாழ்ந்த ஆதிமக்களைப் பற்றியும் தவறான கருத்தை இந்தியாவில் வாழ்ந்த மக்களிடம் பரப்பினர். இவ்வித தவறான பிரச்சாரம் இவர்களின் சுயநலத்திற்காகவே செய்யப்பட்டது. ஏனென்றால் பிறர் இவர்களுக்கு வியாபாரத்தில் போட்டியாக வருவதை விரும்பவில்லை.

பொதுவாக நிலவியிருக்கும் கருத்துப்படி முதன் முதலில் மக்கள் கூட்டம் இந்தியத் துணைக்கண்டத்தின் தென்கோடியிலுள்ள 'ராமர் பாலம்' என்று கூறப்படும் கடலில் ஆலமாயில்லாத திட்டின் வழியாக இலங்கைக்கு வந்து இருக்கவேண்டுமென்று கொள்ளப்படுகிறது. இவ்விதம் வந்த மக்களுள் ஒரு சாராரே 'நாகர்கள்' எனப்படுவோராகும். இந்நாகர்கள் கேரளாவிலுள்ள 'நாயர்கள்' வழிவந்தவர்களாகுமென்றும் மற்றொரு சாராராகிய 'யக்கர்கள்' தென்னிந்திய ஆதிவாசிகளாகிய 'வேடுவ' இனமாகுமென்றும் கருதப்படுகின்றது. இப்போது இலங்கையின் மத்திய பிரதேச காடுகளில் காணப்படும் 'வேடர்களே' பழங்கால யக்கர்கள் என்றும் கருதப்படுகிறது.

நாகர்கள் முக்கியமாக பலவிதமான தேவதைகளை வணங்கி வந்தனர். யக்கர்களும் பூதங்களையும், பேய் பிசாசுகளையும் வணங்கிவந்தனர் * பேராசிரியர் செலிக்மன் என்பவர் இலங்கையில் வாழும் வேடர்கள் உடற்கட்டிலும் கலாச்சாரத்திலும் ஆரிய இன மக்கள் இலங்கையில் குடியேறுவதற்கு முன்பாக வசித்த திராவிட இனமக்களோடு ஒருமைப்பாடுடையவர்கள் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்.

* (Ceylon at the Census of 1911- p 201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலில் வேடர்கள் பெருமளவில் 'சபரகமுவ' மாகாணத்திலேயே வசித்ததாகக் கூறப்படுகிறது. 'சபரகமுவ' என்றால் நாகரீமற்ற மனிதர் வாழும் பிரதேசம் எனப்பொருள்படக்கூறப்படுகின்றது. பிற்காலத்தில் கிழைத்தேய சிங்களவர்கள் மலை பகுதி வந்து குடியேறினதால் ஆதிவாசிகள் ஊவா, பின்தந்னை பகுதிகளுக்கு சென்றுவிட்டார்களாம்.

இலங்கையில் சிங்களவர்கள் இனத்தை தோற்றுவித்த விஜயன் கி. மு. 483-ம் ஆண்டில் இலங்கை வந்தடைந்ததாகக் கூறப்படுகிறது. விஜயன் இலங்கை வந்தடைந்தது அசம்பாவிதமாகவேயாகும். தன் நாட்டிலிருந்து ஏழுநூறு ஆட்களோடு கப்பலில் தன் தகப்பனால் கைவிடப்பட்டு விரட்டப்பட்டார். இதற்குக் காரணம் இவரின் அடாதச் செயல்களேயாகும். விஜயன் தனது ஆட்களோடு வங்காள விரிகுடாக்கடல் மூலம் முதலில் பம்பாய் கடற்கரையை அடைந்ததாகக் கூறப்படுகிறது. இவர் துஷ்டனாகையால் அந்நாட்டு அரசராலும் மக்களாலும் பம்பாயில் தங்க அனுமதிக்கப்படவில்லை.

இதன்பிறகு மீண்டும் கப்பலேறி கடல் பயணம் செய்தனர் நீண்ட பிரயாணத்தின் பின் இலங்கையின் கடற்கரையை அடைந்ததாகக் கூறப்படுகிறது. இவர்கள் வந்த கப்பல் கரையில் மோதி சேதமடைந்தது. பொதுவான கருத்துப்படி இவர்கள் வந்து இறங்கிய இடம் புத்தளத்திற்கருகாமையில் என்று கூறப்படுகிறது. இவர்கள், கடற்கரையில் கப்பல் சேதமுற்று தங்கியிருப்பதைக் கண்ட யக்கர்கள் இவர்களுக்கு இன்னல்கள் பல புரிய எத்தனித்தனர். யக்கர் இனப் பெண்ணாகிய 'குவேனி' விஜயனுக்கு உதவிகள் பல செய்து தன் இனத்தையே காட்டிக்கொடுக்கும் அளவிற்கு முன் வந்தாள் இவளின் உதவியால் யக்கர்களின் இராச்சியத்தைக் கைப்பற்ற விஜயனுக்கு மிகவும் சுலபமாகவிருந்தது.

யக்கர்களின் ஆட்சியைக் கைப்பற்றிய பின், தான் ஏற்கனவே மணந்திருந்த குவேனியை விஜயனுக்கு பிடிக்காமல் போயிற்று. குவேனிக்கு விஜயன் மூலம் ஓர் ஆண் மகனும், பெண் மகவும் ஆக இரண்டு பிள்ளைகள் இருந்தனர். குவேனியையும் பிள்ளைகளையும் யக்கர்கள் இனத்தோடு மீண்டும் போய்ச்சேர்ந்து கொள்ளுமாறு பணித்து தான் வேறு பெண்ணை மணக்கப் போவதாகவும் விஜயன் குவேனியிடம் கூறினான். இதனால் 'குவேனி' மிகவும் மனம் நொந்து போனாள். விஜயனால் கைவிடப்பட்ட 'குவேனி' தன் இன மக்களோடு சேர்ந்துகொள்ள விஜயனைப் பிரிந்து சென்றாள். யக்கர்கள் இவளைக் கண்டதும் இவளின் மேல் கோபமுற்று இவளைக் கொன்றுவிட்டனர். இவளது இரு பிள்ளைகளும் உயிர்பிழைத்து சிவனொளிபாத மலைக்கருகிலுள்ள காடுகளில் தலைமறைவாக வாழ்ந்து வந்ததாகக் கூறப்படுகிறது. காலம் செல்லச் செல்ல இவர்கள் இருவர்களும் மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து இனத்தைப் பெருக்கினார்கள். இவர்களின் வழித்தோன்றல்களே இப்போதும் நாம் காணும் 'வேடர்களாகும்' மேலும் இவ்வினத்தில் பலர் கண்டிய சிங்களவர்களாகவும் மாறிவிட்டனர்.

விஜயன் தனக்கும் தனது ஆட்களுக்கும் அண்மையிலுள்ள பாண்டிய நாட்டிலிருந்தே மணம்புரிவதற்காக எழுநூறு பெண்களை வரவழைத்தானாம். பாண்டிய அரசனும் தன் மகளை சந்தோசமாக ஸ்ரீதன வரிசையோடு ஏனைய பெண்களோடும் இலங்கை அனுப்பினார்; இவர்கள் வந்து இறங்கிய இடம் 'மாதோட்டை' என்று கூறப்படுகிறது. தாய்நாடான இந்தியாவிலிருந்து தமிழர்கள் என்ற ரீதியில் முதன் முதலில் கி. மு. 204-ம் ஆண்டளவில் ஈழத்தின் வடபகுதியில் மக்கள் வந்து குடியேறினர். இதன் பின்னர் சிறு சிறு அளவாக அக்காலத்திய அரசர்களின் நாடுபிடிக்கும் எண்ணங்களினாலும் ஒவ்வொரு காலங்களிலும் ஈழம் வந்து தமிழர்கள் குடியேறினர்.

## 2 போர்த்துகேயர் காலம்.

போர்த்துகேயர் காலத்தில் இந்திய பிரதேசத்தில் உள்ள 'கோவா' போர்த்துகேயரின் காலனியாக இருந்தது. இவ்விடத்தின் 'வைஸ்ராய்' துரை சால்செட் என்னும் இடத்திலிருந்து கி. பி. 1651-ம் ஆண்டளவில் மக்கள் கூட்டமொன்றை மனைவி மக்கள் சகிதமோடு ஈழத்திலுள்ள நீர்கொழும்பு மாவட்டத்தில் குடியேற்றினார். இக்கூட்டத்தினரே பரவர் குலம் எனப்படும் தமிழ் பேசும் சிங்கள மக்களாவர். இப்பரவர்குலம் தற்போது வர்ணகுல, குருகுல, மிகுந்துகுல என்றழைக்கப்படுகின்றனர்.

## 3 ஒல்லாந்தர் காலம:

ஒல்லாந்தர் காலத்தில் ஒல்லாந்து தேசத்திய கிழக்கு இந்திய வர்த்தகக் கும்பினியார் இந்தியாவிலிருந்து தமிழர்களை நெற்பயிர் செய்கைக்காக ஈழம் கொண்டுவந்தனர்.

## 4 கண்டிய மன்னர்கள்:

ஒல்லாந்தர் காலத்தில் தமிழ்ப் பெண்ணை மணந்திருந்த 'நரேந்திர சிம்மன்' என்பவர் கண்டிய இராச்சியத்தை ஆண்டுவந்தார்.

நரேந்திர சிம்மன் கி. பி. 1739-ம் ஆண்டு உயிர் நீத்தார். இவருக்குப்பின் இவருடைய மனைவியின் சகோதரன் 'ஸ்ரீ விஜய ராஜசிங்கன்' என்னும் பெயரைச் சூட்டிக்கொண்டு கண்டிய சிம்மாசனமேறினார். ஸ்ரீ விஜய ராஜசிங்கன் மதுரை நாயக்க மன்னர்கள் வழி வந்தவராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ விஜய ராஜ சிங்கன் உயிர் நீத்தவுடன் நரேந்தப்ப நாயக்கரின் மகனும் இவருடைய மைத்துனருமாகியவர் 'கீர்த்தி ஸ்ரீ ராஜ சிங்கன்' என்ற பெயரைச் சூட்டிக்கொண்டு 11-8-1747-ம் திகதி கண்டிய சிம்மாசனமேறினர் இவர் பட்டத்திற்கு வரும்போது இவருக்கு பதினரே வயதாகியிருந்தது. இவருக்குப் பின் இவருடைய தமையனை 'ராஜாதி ராஜ சிங்கன்' என்பவர் கண்டிய சிம்மாசனமேறி கி பி. 1782-ம் வருடம் தொடங்கி கி. பி. 1798-ம் வருடம் முடிய ஆட்சி புரிந்தார், இவர் காலத்தோடு ஒல்லாந்தர்களின் ஆட்சிக்காலமும் முடிவடைந்தது.

ராஜாதி ராஜ சிங்கன் கி. பி 1798-ம் வருடம் உயிர்நீத்தார். இவருக்குப்பின் கண்டிய முதலமைச்சர் பிலிமதலாவலேயினல் 'ஸ்ரீ விக்ரம ராஜ சிங்கன்' கண்டிய சிம்மாசனத்தில் அமர்த்தப்பட்டார். ஸ்ரீ விக்ரம ராஜ சிங்கன் ராஜாதி ராஜ சிங்கனின் மனைவியின் சகோதரியின் புதல்வனாகும்.

## 5 ஆங்கிலேயர் காலம்:

ஒல்லாந்தர்களின் ஆட்சி முடிவுற்று ஆங்கிலேயர்களிடம் ஆட்சிப் பொறுப்பு கி பி 1798-ம் வருடம் ஒப்படைக்கப்பட்டது. ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் பிலிமத்தலாவலேயின் சூழ்ச்சியால் ஆங்கிலேயரை அரவே வெறுத்தார் ஆங்கிலேயர்களுக்குப் பல இன்னல்கள் புரிந்து வந்தார் ஆங்கிலேயர்கள் நேசக்கரம் நீட்டியும் அரசர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனேடு சமரசம் பேசவந்த ஆங்கிலேயர்களுக்கு பல இன்னல்கள் ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் புரிந்தார்.

ஆங்கிலேயர் கண்டிக்கு வருவதை அறிந்ததும் அரசர் அங்குராங்கட்டையில் உள்ள தனது அரன்மனையில் ஒளிந்துகொண்டார். இதனல் ஆத்திரம் அடைந்த ஆங்கிலேயர் அங்குராங்கட்டையிலுள்ள அரச மாளிகையை தீக்கிரையாக்கி கண்டி திரும்பினர். ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனின் மனைவியின் சகோதரனுகிய 'முத்துசாமி' ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாக இருந்தார். கண்டியில் அரசர் இல்லாமையாலும் கண்டியில் வசித்த சில மக்களின் வேண்டுகோளாலும் ஆங்கிலேயர்கள் 'முத்துசாமி'யை கண்டியசிம்மாசனத்தில் 8-3-1803-ம் திகதி முடிசூட்டிவைத்தனர். இது இவ்விதமிருக்க முதலமைச்சர் பிலிமத்தலாவலே ஸ்ரீ விக்ரம ராஜ சிங்கனை எவ்விதத்திலாவது கொன்று தான் பதவிக்கு வர ஆசைப்பட்டார்.

இதனல் இவர் ஆங்கிலேயர்களுக்கு பல உதவிகள் புரிவதாகக் காட்டிக்கொண்டார். பிலிமத்தலாவலேயின் போக்கு ஆங்கிலேயர்களுக்குப் பிடிக்கவில்லை. ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனுக்கு ஆபத்து பிலிமத்தலாவலேயினல் நேரும் என்று கண்டவுடன் திருச்சிராப்பள்ளியில் வசித்து வந்த ஸ்ரீ விக்ரம ராஜ சிங்கனின் உறவினர்களுக்கு ஆங்கிலேயர்கள் செய்தி அனுப்பி மூதன் மந்திரியால் அரசருக்கு ஆபத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேருமென்றும் உடனே ஆர்காட்டு நவாப்பைச் சந்தித்து இந்தியாவில் உள்ள ஆங்கில அரசின் உதவியை நவாப்மூலம் பெற்று ஸ்ரீ விக்ரம ராஜ சிங்கனை காப்பாற்றும்படியும் கேட்டுக்கொண்டனர்.

ஆங்கிலேயர் முத்துசாமியை அரசனுக்கியதும் கண்டிய மக்களிடையே அதிருப்தியினுல் கலவரம் உண்டாகப் பார்த்தது. இதைச் சமாளிக்க எப்படியாவது ஸ்ரீ விக்ரம ராஜ சிங்கனையே மீண்டும் கண்டிய சிம்மாசனத்தில் அமர்த்த, ஆங்கிலேயர்கள் தீர்மானித்தனர். ஸ்ரீ விக்ரம ராஜ சிங்கனுக்கும் ஆங்கிலேயருக்குமிடையில் நல்லுறவு ஏற்பட்டபின் ஸ்ரீ விக்ரம ராஜ சிங்கனே மீண்டும் சிம்மாசனம் ஏறினுல் முத்துசாமியை தங்களின் பாதுகாப்பில் வைத்துக்கொள்ள ஆங்கிலேயர்கள் விரும்பியதை ஸ்ரீ விக்ரம ராஜ சிங்கன் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனுல் மூத்துசாமியை ஆங்கிலேயர்கள் மீண்டும் ஸ்ரீ விக்ரம ராஜ சிங்கனிடமே ஒப்படைத்தனர். ஸ்ரீ விக்ரம ராஜ சிங்கன் முத்துசாமியை தனக்கு கேடு நினைத்ததினுல் கொன்று விடும்படி உத்தரவிட்டார். அதனுல் மூத்துசாமி 27-6-1803-ம் திகதி மரணத்திற்குள்ளானுர். கண்டிய மன்னருக்கும் ஆங்கிலேயர்களுக்குமிடையில் 'கண்டிய சம்பிரதாய ஒப்பந்தம் (Kandyan Convention) 2-3-1815 ம் திகதி ஏற்பட்டது. இதன்படி ஆங்கிலேயர்கள் கண்டிய சிங்களவர்களின் உரிமைகளுக்கு பாதுகாப்பளிப்பதாக உத்தரவாதமளித்தனர். பௌத்த மதமும் காக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டியிருந்தது. இவ்வொப்பந்தத்தின் பின் கண்டிய அரசர்களின் ஆட்சி ஆங்கிலேயர்களின் கைக்கு ஒப்படைக்கப்பட்டது இதனுல் இலங்கையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி 14-2-1815-ம் திகதியோடு முடிவடைந்தது. கண்டிய மன்னன் ஸ்ரீ விக்ரம ராஜ சிங்கனும் அவரது குடும்பமும் 24-1-1816-ம் திகதி மதுரைக்கு அனுப்பப்பட்டார்கள். இதன் பின் வேலூர் சிறைக்கு கண்டிய கடைசி மன்னர் மாற்றப்பட்டு வேலூர் சிறையில் கி. பி. 1832-ம் வருடம் ஸ்ரீ விக்ரம ராஜ சிங்கன் உயிர் நீத்தார்.

## 6 மலைநாட்டு இந்தியர்:

ஆங்கிலேயர்களின் ஆட்சியோடு மலைநாட்டு இந்தியர்களின் சரித்திரமும் தொடங்குகின்றது. ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் 1827-ம் ஆண்டு இலங்கையின் தேசாதிபதியான 'பார்ன்ஸ்' என்பவர் இருந்தார் இங்கிலாந்து தேச இராஜாங்க அலுவலக காரியதரிசிக்கு இவர் அனுப்பிய அறிக்கையின்படி, 1827-ம் ஆண்டு இலங்கையில் கோப்பி பயிர்ச் செய்கைக்காக பேராதனைக் கருகில் உண்டாக்கப் போகும் தோட்டத்தில் வேலை செய்ய ஆள் திரட்டுமுகமாக தேசாதிபதி பார்ன்சும் அக்காலத்தில் பேராதனையில் உண்டாக்கப்பட்டிருந்த தாவரபூந்தோட்டத்தின் அதிபரும் சேர்ந்து 300 தொழிலாளர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிலிருந்து ஈழம் கொண்டுவந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியத் தொழிலாளர்கள் இலங்கை வந்த மூன்று மாதங்களுக்குள்ளாகவே பல இன்னல்களுக்குட்பட நேரிட்டது.

இதன் பின் 1839-ம் ஆண்டளவில் 2432 தொழிலாளர்கள் இலங்கைக்கு கோப்பி தோட்டங்களில் வேலை செய்யவெனக் கொண்டுவரப்பட்டனர் கி பி 1857-ம் ஆண்டு தேசாதிபதி 'வார்டு' என்பவரால் இந்தியாவிலிருந்து ஈழத்திற்கு தொழிலாளர்கள் தோட்டங்களில் வேலைசெய்வதற்கென வருவது பெருமளவில் ஊக்கப்படுத்தப்பட்டது இத்திட்டத்திற்கு ஆதரவாக 1861-ம் வருடம் ஈழ அரசினர் நான்கு கப்பல்களை போக்குவரத்து வசதிக்காக மன்னருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் மிதக்கவிட்டார்கள். கி பி 1866-ம் ஆண்டு இலங்கை தேசாதிபதி பம்பாயிலுள்ள வர்த்தக ஸ்தாபனமொன்றிற்கு சென்னை, நாகபட்டிணம் மற்றும் இடைப்பட்ட துறைமுகங்களிலிருந்தும் கொழும்பிற்கு தொழிலாளர்களை கப்பல் மூலம் கொண்டுவருவதற்காக மூன்று வருடங்களுக்கு மானியமளித்தார்கள்.

மேலும் இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைத்தோட்டங்களில் மட்டும் வேலைசெய்வதற்கல்லாமல் துறைமுகம், புகையிரத இலாகா, பொதுவேலைப்பகுதி ஆகிய அரசாங்கத்தின் தொழில் ஸ்தாபனங்களிலும் வேலை செய்ய முன்வந்தார்கள் இந்தியத்தொழிலாளர்கள் இலங்கையில் 1844-ம் ஆண்டுவரையும் அடிமைகளாகவே பாவிக்கப்பட்டு வந்தார்கள். 1844-ம் வருடம் அடிமைகளை பதிவு செய்யும் சட்டம் ரத்துசெய்யப்பட்டது

## 7 இந்தியர்கள் தோட்டங்களில் தொழில் செய்ய திரட்டப்படுதல்:

இலங்கை அரசாங்கம் இலங்கையில் இந்தியத்தொழிலாளர் குடியேற்று, கட்டுப்பாட்டதிகாரி இலாகா ஒன்றை 1923-ம் வருடம் ஏற்படுத்தியது. மேலும் இலங்கை அரசாங்கம் இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் இலங்கை வருவதை கண்காணிப்பதற்காக இந்தியாவில் இலங்கைக்கு குடியேருவோருக்கென ஆணையாளர் ஒருவரை நியமித்தது இவரே இந்தியாவில் இலங்கை தொழில் கமிஷன் தலைவராகவும் இருந்தார். இவருடைய கடமையாதெனில் இந்தியாவில் அமுலிலிருக்கும் இந்தியக் குடியேற்ற வெளியேற்ற சட்டங்களையும், சட்டங்களின் உபவிதிகளையும் படித்து அதன்படி நடப்பதுவுமேயாகும்.

இந்தியாவிலுள்ள இலங்கை வெளியேற்று ஆணையாளரின் முக்கியமான கடமை வேலைக்கு ஆள்திரட்டும் கங்காணிமார்களின் 'லைசன்சுகளில்' கையொப்பமிடுவதும், லைசன்சுகளை ரத்துச் செய்வதும், ஆள் திரட்டும் கங்காணிமார்களை மேற்பார்ப்பதுவும், இந்திய சட்டதிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்களுக்கமைய ஏற்படுத்தப்பட்டுள்ள மண்டபம், தட்டப்பாறை ஆகிய இடங்களில் இலங்கை அரசாங்கத்தால் ஏற்படுத்தப் பட்டி ருக்கும் முகாம்களுக்கு தொழிலாளர்களைகொண்டு செல்வதுமேயாகும்.

மண்டபம், தட்டப்பாறை ஆகிய இடங்களில் உள்ள முகாம் களுக்கு இலங்கை அரசாங்கம் தனித்தனியே துரைமார்களை நியமித் திருந்தது. துரைமார்களே இம் முகாம்களின் நிர்வாகத்திற்குப் பொருப்பாயிருந்தார்கள். இலங்கை, தொழிலாளர் குடியேற்ற கட் டுப்பாட்டு அதிகாரியினுல் முதலாளிமார்களுக்கு வழங்கப்பட்ட கங் காணி ஆள்திரட்டும் அனுமதிப் பத்திரங்கள் (Kangany's Recruiting, Licences) யாவும் முதலில் இந்தியாவிலுள்ள இலங்கை வெளி யேற்று ஆணையாளரால் கையொப்பமிடப்பட்டது இதன் பின்ன ரேயே கங்காணிமார்கள் ஆள் திரட்டமுடிந்தது. இவ்விதம் உத்தரவு பெற்ற "லைசன்சுகளை" வைத்திருக்கும் கங்காணிமார்கள் யாரையா வது வேலைக்கு திரட்ட நேர்ந்தால் முதலில் அந்நபர் வசிக்கும் கிராம முன்சீப் முன்நிலையில் கங்காணிமார் அந்தநபரை அழைத்துச் சென் றனர். இலங்கை போகவிரும்பும் நபரின் குடும்பத்தாரினது சம்மதத் தைப் பெற்றப் பின்னரேயே கங்காணிமார் வைத்திருக்கும் 'ஆள் திரட்டும் அனுமதிப் பத்திரங்களில் (Licences) கிராம முன்சீப் அந்தபரின் பெயருக்கெதிரான இடத்தில் கையொப்பமிட்டார். இவ்விதம் தேர்வுசெய்யப்பட்ட அந்நபர் இலங்கைத் தொழில் கமி ஷனரின் கிளைக்காரியாலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார் இவ் விடத்தில் வைத்து இந்நபர் முதலாளியின் விருப்பத்திற்குட்பட்ட சரியான ஆள்தானு என்றும் இவரது தேக ஆரோக்கியமும், வேலைத் திடமும் ஆராயப்பட்டது. இவ்விது தேர்வுக்குப்பின் இந்நபர் இவ ரது கங்காணியோடு சாப்பாடு போடப்பட்டு மண்டபம் முகாமிற்கு அனுப்பப்பட்டார். இவ்விடத்திலிருந்து இந்நபர் இலங்கை தொழில் கமிஷன் உத்தியோகத்தர்களால் இந்நபர் வேலையில் சேரப்போகும் தோட்டத்திற்கு நேரேயே அனுப்பப்பட்டார்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு குடிபெயர்ந்து வரும் தொழி லாளர்களின் வசதிக்காக போல்காவலையிலும் கொழும்பிலும் டிப் போக்கள் திறக்கப்பட்டன. முன்னையது மலைநாட்டு பகுதிகளுக்கு செல்பவர்களுக்காகவும் பின்னையது களனிவெளி கடற்கரையோர பிரதேசங்களுக்குச் செல்பவர்களின் வசதிக்காகவும் ஏற்படுத்தப்பட் டன. கண்டி, தோட்ட முதலாளிமார் சங்கத்தின் (Ceylon Planters Association, Kandy) அங்கத்தினர்கள் மட்டுமே இலங்கை தொழில் கமிஷனில் அங்கத்துவம் பெற உரிமையுள்ளவர்களாக இருந்தார்கள். ஆகவே இலங்கைத் தொழில் கமிஷன் (Ceylon Labour Commission) இலங்கை தோட்ட முதலாளிமார்களினுல் நடத்தப்பட்டுவந்த தனி யார் ஸ்தாபனமாக இயங்கி வந்தது. இந்த ஸ்தாபனம் தோட்ட முத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாளிமார் சங்கத்தின் அங்கத்தினர்களாகிய காலஞ்சென்ற திரு. ஜேம்ஸ் வெஸ்ட்லாண்டு என்பவரின் நினைப்பூட்டுகையினாலும் காலஞ் சென்ற திரு. எட்கர் டர்னர் என்பவரின் ஆதரவினாலும் தொடங் கப்பட்டது.

இலங்கை தொழில் கமிஷனின் தலைமைச் செயலகம் திருச்சி ராப்பள்ளியிலிருந்தது. இந்த ஸ்தாபனம் 1-6-1904-ம் திகதி தொடங்கி வைக்கப்பட்டது இலங்கைத் தோட்டங்களில் வேலை செய் யும் தகுதிகள் யாவும் விபரமாக வேலைக்கு திரட்டப்பட்டவர்களுக்கு இத்தாபனத்தாரால் கூறப்பட்டது. இவ்விதம் திரட்டப்பட்டவர்கள் தங்களுக்கு குறிக்கப்பட்டுள்ள தோட்டத்தை அடையும் வரையும் மிகவும் கவனமாக பாதுகாக்கப்பட்டார்கள். தோட்டங்களின் வேலை செய்வதின் மூலம் ஏற்படும் நன்மைகள் யாவும் விளம்பரம் மூல மாகவும் வித்தைகள் மூலமாகவும் மற்றும் ஏனைய மிஷன்களாலும், வேறுதாபனங்களாலும் விபரமாக எடுத்துச் சொல்லப்பட்டன. தென் னிந்திய மாவட்டங்கள் தொழிலாளர் வேலைக்குத் திரட்டுமுகமாக 'சர்க்கிள்கள்' என்ற அடிப்படையில் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு சர்க் கிளும் இலங்கை தொழில் கமிஷனைச்சேர்ந்த உதவி ஆணையாளர் ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கியது. ஒவ்வொரு உதவி ஆணை யாளரும் அவரின் சர்க்கிளுக்குள் வசிக்கும் எந்த நபரும் வேலையில் சேர விரும்பி வந்தால் அந்நபரை சோதனை செய்யக்கூடிய அதிகாரம் உதவி ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது மேலும் உதவி ஆணை யாளர்கள் அவர்களின் சர்க்கிள்களில் நிலவும் அப்போதைக்கப்போ தய சூழ் நிலையைப்பற்றி திருச்சியிலுள்ள தலைமைச் செயலகத்திற்கு அறிக்கை அடிக்கடி சமர்ப்பித்து வந்தார்கள்

ஆள் திரட்டும் மாவட்டங்கள் கீழ்கண்டவாறு பிரிக்கப்பட்டது.

1 திருச்சிராப்பள்ளி சர்க்கிள்: திருச்சிமாவட்டம், புதுக்கோட்டை சமஸ்தானம், தஞ்சாவூர் மாவட்டம், ஆகியவற்றை கொண்ட தாக இருந்தது:

2 வேலூர் சர்க்கிள்: செங்கல்பட்டு மாவட்டம், வடக்கு, தெற்கு ஆற்காடு மாவட்டங்களை கொண்டதாக இருந்தது.

3 சேலம் சர்க்கிள்: சேலம் மாவட்டம் கோயம்புத்தூர், திருச்சி மாவட்டங்களின் சில பகுதிகளையும் கொண்டதாயிருந்தது.

4 மதுரை சர்க்கிள்: மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம் மாவட் டங்களை கொண்டதாக இருந்தது.

இலங்கைத் தொழில் கமிஷனின் கிளை அலுவலகங்கள் ஒவ்வொரு சர்க்கிளிலுமுள்ள பிரதான இடங்களில் கீழ்கண்டவாறு திறக்கப்பட்டன.

அவையாவன:

1 திருச்சி சர்க்கிள்: பெரம்பலூர், துறையூர், முசிரி, தஞ்சாவூர், அறந்தாங்கி புதுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 வேலூர் சர்க்கிள்: வேலூர், அரக்கோணம், செங்கல்பட்டு விழுப்புரம்.

3 சேலம் சர்க்கிள்: சேலம், ஆத்தூர், நாமக்கல், ஈரோடு.

4 மதுரை சர்க்கிள்: திண்டுக்கல் மதுரை, திருநெல்வேலி என்னு மிடங்களாகும்.

சர்க்கிள்களுக்கு அடங்காத 'ஏஜன்சிகள்' திருச்சியும், மண்டபமுமாகும். மண்டபம் முகாம் இலங்கை அரசாங்க உத்தியோகத்தாரின் உடனடியான கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிக்கொண்டிருக்கும் இலங்கை அரசாங்கத்தின் ஸ்தாபனமாகும். இந்த முகாமிற்கான இடம் சென்னை அரசாங்கத்தினால் இலங்கை அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டதாகும். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு குடிபெயரும் தொழிலாளர்கள் இங்கு தங்கிச் செல்வதற்கு சென்னை அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. தனுஷ்கோடித்துறையில் இந்திய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருக்கும் 'பாதுகாவலர்' (Protector of Emigrants) தனுஷ்கோடியிலிருந்து மண்டபத்திற்கு தினமும் வந்து போவார். இவரின் முக்கியக்கடமை இலங்கைக்குக் குடிபெயரும் தொழிலாளரின் நலன் பேணுவதேயாகும். தொழிலாளர்கள் இந்தியாவை விட்டு இலங்கைக்கு குடியேறுவது 1922-ம் வருட இந்திய குடிபெயறும் சட்டத்தின் கீழும் 1923-ம் வருடத்திய இந்திய உத்தரவுகளின் படியும் அமைந்ததாகும் சென்னை மாநில தொழில் கமிஷனர் இச் சட்டத்தின் கீழ் தலைவராக இருந்தார். மேலும் இருவர் குடிபெயறுவோரின் நலன் பேணுவோர்களாக இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார்கள். திருச்சியில் இருந்த இலங்கை குடிபெயரும் ஆணையாளர் அலுவலகம் 1957-ம் வருடத்தோடு மூடப்பட்டது.

இலங்கையில் இந்தியத் தொழிலாளர்களின் நலன் கருதி கண்டியில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக இந்திய சிவில் சேவையிலிருந்து ஒருவர் இந்திய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டார். இவரின் முக்கிய கடமை இந்தியாவில் ஆள்திரட்டும் லைசன்சுகளில் ஒப்பமிடுவதும், தொழிலாளர்களை மேற்பார்ப்பதுவும், தொழிலாளர்களின் நலன் பேணுவதுமேயாகும். முதன் முதலில் கண்டியில் இந்திய ஏஜன்டாக இருந்தவர் திரு. ரெங்கநாதன் என்பவராகும்.

## 8 வைத்திய வசதி

இலங்கைத் தோட்டங்களில் தொழில்புரிய வரும் தோட்டத் தொழிலாளர்களின் நலன் கருதி தோட்ட முதலாளிமார் வைத்திய வசதிகள் கட்டாயமாக செய்து கொடுக்கவேண்டுமென்று இலங்கை அரசாங்கம் கி. பி 1865ம் ஆண்டு சட்டம் இயற்றியது.

## 9 இந்தியர் வருகை தடை செய்தல்

இவ்வாறாக இந்தியர்களின் தொடர்ச்சியான வருகை கி. பி. 1839ல் தொடங்கி கி. பி. 1939ம் ஆண்டு வரையில் முடிவடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசினல் தொழில் அனுபவமில்லாத தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்து இலங்கை வருவது 1-8-1939ம் திகதியிலிருந்து தடை செய்யப்பட்டது. இவ்விதத் தடை உத்தரவு ஏற்கனவே இலங்கைத் தோட்டங்களில் வேலை செய்பவர்கள் இந்தியா சென்று திரும்பி வருவதற்காக 1942-ம் ஆண்டில் தளர்த்தப்பட்டது. இவ்விதம் இவர்கள் 1-9-1942ம் திகதியிலிருந்து இந்தியா போய் வர அனுமதிக்கப்பட்டார்கள்.

1824ம் வருடம் இலங்கையில் உள்ள தமிழர்களின் ஜனத்தொகை 195,697 பேர் ஆகும். இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் என்ற பாகுபாடு 1911ம் ஆண்டு நடைபெற்ற பொதுக் கணக்கெடுப்பின் பின்னரேயே கடைபிடிக்கப்பட்டது.

## 10 இந்தியர் ஜனத்தொகை

முதன் முதலில் இலங்கையில் தேசாதிபதி சர் எட்வட் பான்ஸ் என்பவர் காலத்தில் 1824ம் ஆண்டு பொதுக் கணக்கெடுப்பு நடைபெற்றது. இந்த அறிக்கை 1827ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதன் பின்னர் முறையான கால அளவில் பொதுக் கணக்கெடுப்பு 1871ம் ஆண்டிலிருந்தே தொடங்கிற்று.

இலங்கையில் இந்தியத் தமிழர்களின் ஜனத்தொகை 1963ம் ஆண்டு இறுதி வரையில் 11,23,850 ஆக இருந்ததெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

## 11 இலங்கை இந்தியர் பிரச்சினை

இந்திய அரசாங்கத்தால் தொழிலாளர்கள் இலங்கை வருவது தடை செய்யப்பட்ட திகதியிலிருந்தே இலங்கை இந்தியப் பிரச்சினை தொடங்குவதாகும்.

## 12 பாஜ்பாய்-சேனநாயகா பேச்சுகள்

இலங்கை வாழ் இந்தியர்களின் பிரச்சினை சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனையின் பிரகாரமும் இந்திய அரசாங்கத்தின் அனுமதியோடும் புதுடில்லியில் இலங்கை அரசாங்கத்தின் தூதுக் கோஷ்டிக்கும் இந்திய அரசாங்கத்தின் தூதுகோஷ்டிக்கும் இடையில் ஏகாதிபத்திய அரசின் செயலகக் கட்டிடத்தில் 1940-ம் வருடம் நவம்பர் மாதம் முறையே 4, 5, 7, 8, 12 திகதிகளில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. இலங்கை அரசாங்கத்தின் தூதுகோஷ்டியில் கௌரவ திரு. D. S. சேனநாயகா, கௌரவ திரு S. W. R. D. பண்டாரநாயகா, கௌரவ திரு. G. C. S. கொரியா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இத்தூது கோஷ்டியின் செயலர்ளராக திரு. L. J. செனவிரத்தின C. C. S. பனியாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியத் தூதுகோஷ்டியின் அங்கத்தினராக கௌரவ சர். கிரிஜா சங்கர் பாஜ்பாய், K. B. E, C. I. E, I. C. S., கௌரவ திவான் பகதூர் சர். A. ராமசாமி முதலியார், திரு. A. விட்டல் பாய் O. B. E, I. C S, ஆகியோர் இருந்தனர். இத்தூதுகோஷ்டியின் செயலாளராக திரு. S. தத் I. C. S, பணியாற்றினர். இவ்விரு தூதுகோஷ்டிக்களுக்குமிடையில் சம்பாசனைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விசயங்கள் பின்வருமாறுகும்.

1 இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் இலங்கைக்கு வருவது கட்டுப்படுத்தப்படுவது.

2 நாள் சம்பளத்தில் வேலைசெய்யும் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்குவது.

3 இந்தியர்களுடைய வாக்குரிமையும் இலங்கை வாசமும்.

4 இந்தியர்கள் இலங்கையில் வாழும் உரிமைகளிலும், பொருளாதாரத் துறையில் அனுபவித்து வரும் வசதிகளிலும் கட்டுப்பாடு கொண்டுவருவதுமேயாகும்.

மேற்கண்ட விடயங்களில் சுமுகமான தீர்வு கண்டபின் இலங்கையோடு வைத்திருக்கும் வர்த்தக உறவும் மீண்டும் பரிசீலிக்கப்படவேண்டுமென ஒத்துக்கொள்ளப்பட்டது. இலங்கைத் தூதுகோஷ்டி இலங்கையில் வாழும் இந்தியர்களின் ஜனத்தொகையைக் குறைக்கு முகமாகவே பெரும்பாலும் வாதாடியது. இலங்கைத் தூதுகோஷ்டியினர் சமர்ப்பித்த அறிக்கையின்படி.

1 இந்தியர்களில், இலங்கை வம்சாவழியெனக் கருதப்படுவர்களின் தகப்பன் இலங்கை வம்சாவழியாகவோ அல்லது பதிவுப் பிரசையாகவோ அல்லது நபரின் பிறப்பு சந்தேகத்திற்கிடமானதாக இருந்தால் தாய் வம்சாவழியாகவோ அல்லது பதிவு பிரசையாகவோ இருக்கவேண்டும் எனக்கூடப்பட்டது. இவ்வித அத்தாட்சிகள் வைத்திருக்கும் நபர் மற்ற இலங்கை வம்சாழி பிரசைகளுக்குண்டான சகல வாய்ப்புக்களையும் அடைய தகுதியுடையவரென தீர்மானிக்கப்பட்டது.

2 ஏனைய இந்தியர்கள் எல்லோரும் பிரித்தானிய பிரசைகளுக்குண்டான சலுகைகளோடு வாழலாமெனக் கூறப்பட்டது. இதிலும் இலங்கை பதிவு பிரசையாக இருக்க விரும்புவோர் ஐந்து வருட வாசமேனும் இலங்கையில் செய்திருக்கவேண்டுமெனவும் இப்படிப்பட்டவர்கள் சட்ட மன்றத்திற்கு வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களாசவார்கள் என்றும், ஆனல் இவர்களுக்கு முடிக்குறிய காணி பெறுவதோ, மீன்பிடி சட்டத்தின் பிரகாரம் இலங்கையர் அனுபவிக்கும் உரிமைகளோ இலங்கை அரசின் கீழ் உத்தியோகம் பெறுவதோ தடைசெய்யப்படவேண்டும் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 ஐந்தாண்டுவரை வாசகாலமில்லாதவர்களும் பதிவு பிரசையாக இருக்க விரும்பாதவர்களுக்கும் இலங்கையில் வாசம் செய்ய பர்மிட்டுகள் வழங்கப்படுவார்களாம். இந்த வாசகால பர்மிட் இவர்கள் இலங்கையில் வாசம் செய்யவும் தொழில் புரியவு மட்டுமே உதவும்.

இலங்கைத் தூதுகோஷ்டியின் கோரிக்கைகள் இந்தியத் தூது கோஷ்டியினருக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதாய் அமையவில்லை. இத ஞல் இப்பேச்சுவார்த்தைகள் முறிவுற்றன.

## 13 மீண்டுமோர் பேச்சு

இலங்கை வாழ் இந்தியர்களின் சம்பந்தமாக மீண்டும் இலங் கை அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் இந்திய அரசாங்கத்தின் தூதுகோஷ்டி கௌரவ சர். G. S. பாஜ்பாய், K.B.E, C I E. I.C.S அவர்களின் தலைமையின் கீழ் 1941-ம் வருடம் செப்டம்பர் மாதம் 4-ம் திகதி இலங்கை வந்தது. இலங்கைத் தூதுகோஷ்டியினரும் இந் தியத் தூதுகோஷ்டியினரும் சேர்ந்து 1941-ம் வருடம் செப்டம்பர் மாதம் 5-ந் திகதியிலிருந்து 14-ம் திகதி முடிய கொழும்பில் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள். இந்த நாட்களில் நடந்த பேச்சுவார் த்தைகளின் விசயங்களை தனித்தனியே ஆராய்ந்து முடிவெடுக்கு முக மாகவே மேற்கொண்ட பேச்சு வார்த்தைகள் 1941-ம் வருடம் செப் டம்பர் மாதம் 15-ம் திகதியிலிருந்து பின்போடப்பட்டது. மீண்டும் இரு தூதுகோஷ்டிகளின் பேச்சு வார்த்தைகள் 1941-ம் வருடம் செப்டம்பர் மாதம் முறையே 18, 19, 20 திகதிகளில் நடந்தது. இரு தூதுகோஷ்டியினருக்குமிடையே 1941-ம் வருடம் செப்டம்பர் மாதம் 20-ந் திகதி ஒரு பொது உடன் படிக்கை ஏற்பட்டது.

இப்பொது உடன் படிக்கையின்படி 21-9-41-ம் திகதி இரு தூதுகோஷ்டியினரும் கூட்டாக உடன்பாட்டு அறிக்கையில் கை யொப்பமிட்டார்கள். இக்கூட்டறிக்கையின்படி இந்தியர்களின் கீழ்க் கண்ட பிரச்சினைகளுக்கு முடிவு காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அவையாவன:

1 குடியேற்றமும் மறுபிரவேசமும்.
2 கோட்டா.
3 பதிவு.
4 நிலை (Status) என்பனவாகும்.

## 14 ரப்பர் தோட்டங்களுக்கு தொழிலாளர்

யுத்தக் கெடுபிடியின் காலத்தில் ரப்பர் பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கமாக இலங்கையர் போதியளவு தோட்ட வேலைக் குக் கிடைக்காததினாலும், இலங்கை மந்திரிமார்களின் கோரிக்கை யினாலும் ரப்பர் தோட்டங்களில் வேலை செய்ய தொழிலாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிலிருந்து கொண்டுவருவதற்கு இலங்கை தேசாதிபதி இந்திய மகா தேசாதிபதிக்கு 8-12-1942-ம் திகதி அனுப்பிய தந்தி மூலம் இந்திய மகா தேசாதிபதியின் அனுமதிகேட்டார். இவருடைய தந்தியில் கீழ்க்கண்ட உடன்படிக்கையோடு தொழிலாளர்கள் திரட்டப்படுவார்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.

1 திரட்டப்படும் தொழிலாளர்களுக்கு சம்பளமும் தொழில் வசதியும் இலங்கையர்களுக்கு அளிக்கப்படும் விதமாகவே இருக்கும்.

2 யுத்தம் முடிந்தவுடன் இவர்கள் இந்தியாவிற்கு திருப்பியனுப்பப்படுவார்கள் அல்லது ஒப்பந்தத்தின்படி வேறு எந்த விதத்திலும் நடத்தப்பட வேண்டுமானல் அவ்விதமே நடத்தப்படுவார்கள்.

இத்தந்திக்கு இந்திய அரசாங்க காரியதரிசியிடமிருந்து முழு விபரமும், தேவையான ஆட்களின் எண்ணிக்கையும் குறிப்பிடுமாறு கேட்டு பதில் தந்தி 10-12-1942-ம் திகதி இலங்கை தேசாதிபதிக்கு அனுப்பப்பட்டது. இத்தந்திக்குப் பதிலாக இலங்கை தேசாதிபதி இந்திய அரசாங்கக் காரியதரிசிக்கு அனுப்பிய தந்தியில் ரப்பர் தோட்டங்களில் வேலைசெய்ய மேலும் 20,000 ஆட்கள் தேவைப்படுமென்று குறிப்பிட்டார் மற்ருெரு தந்தியில் தோட்ட முதலாளிமார் சங்கத்தின் குத்துமதிப்பான கணக்குப்படி தேயிலை தோட்டங்களில் வேலை செய்ய இன்னும் 30,000 ஆட்கள் தேவைப்படும் என்று குறிப்பிட்டிருந்தார். இதற்குப்பின் இந்திய அரசாங்க காரியதரிசி இலங்கையின் பிரதிநிதியாக புதுடில்லியில் இருக்கும் சர் டொன் பாரன் ஜயதிலகா அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் திரு பாரன் ஜயதிலகா அவர்கள் திரு ஆனே அவர்களுடன் 16-1-43-ம் திகதி நடத்திய பேச்சு வார்த்தைகளை குறிப்பிட்டு மேலும் தொழிலாளர்களை இலங்கைக்கு அனுப்பு முன்னர், தொழிலாளர்களின் குடியேற்றம் அவர்களின் நிலை ஆகியன பற்றி முடிவெடுக்க வேண்டுமென திரு. ஆனே அவர்கள் தன்னிடம் கூறுவதாக இலங்கை ஸ்தானிகரான சர் பாரன் ஜயதிலகாவுக்கு சுட்டிக்காட்டினர்.

திரு ஆனேயின் கோரிக்கையானது ஏற்கனவே இருநாடுகளுக்கிடையில் ஒப்பந்தமாகியுள்ள உடன்படிக்கைக்கு மாறுபட்டிருப்பதால் உடனடியாக ரப்பர் தோட்டங்களுக்கு தேவைப்படும் தொழிலாளர்களை திரட்டும் முயற்சி கைவிடப்பட்டது.

## 15 இந்தியர், பாகிஸ்தானியர் பிரஜா உரிமை சட்டம்

இலங்கைப் பிரதமர் கௌரவ திரு. D. S. சேனநாயகாவுக்கும் இந்தியப் பிரதமர் கௌரவ திரு பண்டிட் ஜவஹர்லால் நேருவுக்கும் இடையில் புதுடில்லியில் வைத்து 28-12-47, 29-12-47, 30-12-47 ஆகிய திகதிகளில் இலங்கையில் வாழும் இந்தியர்களின் பிரஜா உரிமைப்பற்றி பேச்சு வார்த்தைகள் நடந்தது. இப்பேச்சு வார்த்தைகளின் மூலம் பிரஜா உரிமை வழங்குவதில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுடன்பாட்டின் பிரதிபலிப்பே இந்தியர் பாகிஸ்தானியர் (வசிப்பவர்) பிரஜா உரிமைச் சட்டம் (1949) ஆகும். இச்சட்டத்தின்படி மனுதார் மணமுடித்தவராக இருந்தால் 1-1-46-ம் திகதிக்கு முன்பாக ஏழுவருடகால வாசமும், மணமுடிக்காதவராக இருந்தால் பத்து வருட கால வாசமும் இலங்கையில் செய்திருக்கவேண்டும். இச்சட்டம் 5-8-1949-ம் திகதி அமுழுக்குக் கொண்டு வரப்பட்டது. இச்சட்டம் பிரஜா உரிமைக்கு மனுச்செய்வோருக்கு இரண்டு வருட அவகாசகாலம் கொடுத்தது. இச்சட்டத்தின் கீழ் அவகாசகாலம் முடியும் தேதியான 6-8-51க்குள் 237,034 மனுக்கள் பிரஜா உரிமை கோரி அனுப்பப்பட்டன.

## 16 நாடற்றவர்கள்

இச்சட்டத்தின் கீழ் பிரஜா உரிமைக்கு மனுச்செய்து தோல்வி கண்டவர்கள் நாடற்ற பிரஜைகளானார்கள். இச்சிக்கலை நீக்குமுகமாக இலங்கைப் பிரதமர் கௌரவ சர் ஜோன் கொத்தலாவலை திரு S.W R.D பண்டாரநாயகாவுடன் 1954-ம் ஆண்டு புது டில்லிக்குப் பயனமானார் முதல் பேச்சுக்கள் 1954-ம் வருடம் ஜனவரி மாதம் நடைபெற்று ஒப்பந்தம் காணப்பட்டது. (Vide India Treaty Series No 1 of 1954). இவ்வொப்பந்தத்தில் மேற்கொண்டு விளக்கம் கேட்கும் வகையில் இலங்கைப் பிரதமர் 1954-ம் வருடம் ஒக்டோபர் மாதம் புதுடில்லி பயணமானார்.

இந்தியப் பிரதமர் நேருவோடு பேச்சுவார்த்தைகள் சுமுகமான முறையில் முடிவுற்று இலங்கைப் பிரதமர் நாடு திரும்பினார். இவ்வொப்பந்தம் எட்டு அம்சங்களைக் கொண்டதாக இருந்தது. இவ்வொப்பந்தம் இலங்கை ஜனப்பிரதிநிதிகள் சபையில் அங்கத்தினர்களின் விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தின் மீதான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் கொழும்பு மத்தியத் தொகுதி அங்கத்தவரான திரு. பீட்டர் கெனமன் அவர்கள் விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டு "பிரதமர் சபையில் கொடுக்கும் வாக்குறுதிகளுக்கு மாறாக இந்தியர் பாகிஸ்தானியர் வாசம் (பிரஜா உரிமை) பதிவு ஆணையாளர் திரு. H. E. தென்னகூன் அவர்கள் தனது உத்தியோகத்தர்களுக்கு கொடுக்கும் உத்தரவுகள் யாவும் மூறறுனவை என்றும் இவ்வித முறனை உத்தரவுகளின் புகைப்படநகல் பிரதிகள் புதுடில்லி பேச்சு வார்த்தைகளின் போது இலங்கைத் தூதுகோஷ்டியிடம் காட்டப்பட்டனவென்றும் இதன் பிறகே இலங்கை தூதுகோஷ்டி கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட முன்வந்தனர்" என்றும் கூறினார்.

இலங்கை தூதுகோஷ்டி வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் "பிரஜா உரிமை வழங்கல் சம்பந்தப்பட்ட இலங்கை அரசாங்க உத்தியோகத்தர்கள் பிறப்பித்த உத்தரவுகள் யாவும் சட்ட நுனுக்க அடிப்படையில் ஆராயப்பட்டு பின்பு இலங்கை அரசாங்கத்தினால் தகாத உத்தரவுகள் என்று கருதப்படும் உத்தரவுகளெல்லாம் ரத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படும் என்றும் பிரஜாவுரிமைக்கு மனுச்செய்தோர் எல்லோரும் பிராஜவுரிமைச் சட்ட நுனுக்க சிக்கல்களிலிருந்து பாதுகாப்பளிக்கப்படுவார்கள்'' என்றும் கூறப்பட்டது

1954-ம் வருடம் ஒக்டோபர் மாதம் நேரு கொத்தலாவலை ஒப்பந்தம் கடும் எதிர்ப்புக்குப்பின் கிழித்தெரியப்பட்டது.

## 17 இந்தியருக்கு தனித் தேர்தல் தொகுதி

சர் ஜோன் கொத்தலாவலை காலத்தில் இலங்கைப் பதிவு பிரஜையாக உள்ள இந்தியர் பாகிஸ்தானியர்களுக்கு தனித்தொகுதிகள் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் India Treaty Series No. 1 of 1954 என்ற ஒப்பந்தத்தின் கீழ் அமைந்ததாகும். இந்தியர் பாகிஸ்தானியர் பாராளுமன்றத்திற்கு பிரதிநிதித்துவம் தனித் தொகுதி ரீதியில் பெறுமுகமாக கௌரவ சர் ஜோன் கொத்தலாவலை காலத்தில் இந்தியர் பாகிஸ்தானியர் (பாராளுமன்ற பிரதிநிதித்துவம்) சட்டம் இல 36, 1954 பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி பதிவுப் பிரஜைகள் எல்லோரையும் தனி வாக்காளர் இடாப்பில் வைப்பதேயாகும் இலங்கை நான்கு பெரும் தொகுதிகளாக பிரிக்கப்படும். இப்போதிருக்கும் எந்தப் பாராளுமன்றத் தொகுதியிலாவது இருநூற்றி ஐம்பதுக்கு மேல் இந்தியர் பாகிஸ்தானியர் வாக்காளர்களிலிருந்தால் அவர்களின் பெயர்களெல்லாம் பொது வாக்காளர் இடாப்பிலிருந்து தனித்தொகுதி வாக்காளர் இடாப்பிற்கு மாற்றப்படும்.

கௌரவ் திரு. S. W. R. D. பண்டாரநாயகா அவர்கள் 1956-ம் ஆண்டு பொதுத்தேர்தலில் வெற்றியீற்றி இலங்கைப் பிரதமரானதும் இச்சட்டத்தை இரத்துச் செய்தார். திரு. பண்டாரநாயகா காலத்தில் இந்தியர்களைப் பற்றிய பேச்சு வார்த்தைகள் ஒன்றும் நடைபெறவில்லை

## 18 திரு. S. W. R. D. பண்டாரநாயகா

கௌரவ திரு S W. R. D. பண்டாரநாயகா 1959-ம் வருடம் செப்டம்பர் மாதம் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இவருக்குப் பின் திரு. தஹநாயகா இலங்கைப் பிரதமரானார்.

## 19 பொதுத்தேர்தல்

இரண்டு பொதுத்தேர்தல்கள் 1960-ம் வருடம் நடந்தன. 1960ம் வருடம் மார்ச்சு மாதம் நடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அதிக ஸ்தானங்களைப் பெற்றது. இருந்தாலும் அரசாங்கம் அமைக்க முடியவில்லை. இதனால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் 1960-ம் வருடம் யூலை மாதம் பொதுத்தேர்தல் நடந்தது. இவ்விரு தேர்தல்களிலும் இந்தியர்களுக்கெதிரான பிரசாரம் செய்யப்பட்டது. யூலை மாதம் நடந்த பொதுத்தேர்தலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா இலங்கை பிரதம மந்திரியானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 திருமதி பண்டாரநாயகா

இவர் காலத்தில் தான் இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரிக்கும் இவருக்கும் இடையில் நீண்ட நாள் பிரச்சினையாக விருந்த இலங்கை இந்தியப் பிரச்சினை ஒரு சுமுகமான முடிவிற்கு வந்தது. இவ்வுடன்படிக்கை 'சிறிமா – சாஸ்திரி' உடன்படிக்கை என்றும் கூறப்படுகிறது. இவ்வொப்பந்தம் மூதவை அங்கத்தினர் முன் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடந்தது. இதன் பின் சனப்பிரதிநிதிகள் சபையில் விவாதத்திற்கு இவ்வொப்பந்தம் சமர்ப்பிக்கப்படு முன்னரேயே சிறிமாவோவின் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது. சிறிமாவோவின் அரசாங்கம் 1964-ம் ஆண்டுடன் முடிவடைந்தது.

## 21 தேசிய அரசாங்கம்

மீண்டுமோர் பொதுத்தேர்தல் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் நடந்தது. இத்தேர்தலில் கௌரவ திரு. டட்லி சேனநாயகா இலங்கைப் பிரதமரானார். இவரது காலத்தில்தான் சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் 1967-ம் வருடம் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமானது. இச்சட்டத்திற்கான உப-விதிகள் 1968-ம் வருடமே நிறைவேற்றப் பட்டது. இச்சட்டத்தின் கீழ் மூன்று லட்சம் (3,00,000) நாடற்ற இந்தியர்களுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்படும். ஐந்தேகால் (5,25,000)லட்சம் நாடற்ற இந்தியர்கள் இந்தியப்பிரஜைகளாவார்கள். மீதமுள்ள ஒன்றரை லட்சம் (1,50,000) நாடற்ற இந்தியர்களின் தலைவிதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் யார் யாருக்கு இலங்கைப்பிரஜா உரிமை வழங்கப்படும் என்பது இந்தியா–இலங்கை ஒப்பந்தம்(அமுல்) சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. இச்சட்டம் பெரும்பாலும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு 1939-ம் வருடத்திற்கு முன்னால் குடிபெயர்ந்த இந்தியர்களை மறைமுகமாக உள்ளடக்கியதாக அமைந்திருக்கிறது. இலங்கைத் தேயிலை, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் பொருட்டு தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்து கொண்டுவருவதற்காக இலங்கைத் தொழில் கமிஷனுக்கு ஏஜண்டுகளாக இருந்த கங்காணிமாருக்கு புதிதாக ஆள் திரட்டும் அனுமதிச் சீட்டுகள் (Kanganys Recruiting Licences) இலங்கைத் தொழில் கமிஷனரால் வழங்கப்படுவது 1935-ம் ஆண்டில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்டது. இதன்பின் இந்திய அரசாங்கமும் இந்தியாவிலிருந்து பயிற்சி பெறாத தொழிலாளர்கள் இலங்கை செல்வதை 1939-ம் வருடம் தடை செய்தது. இதனால் ஏற்கனவே ஆள் திரட்டும் லைசன்சுகளை வைத்திருந்தவர்களின் தொழிலுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இத் திகதிக்குப்பின் தொழிலாளர்கள் இலங்கைக்கு தொழில் செய்ய வருவது அனுமதிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சட்டத்தின் படி இந்தியரில் எவரும் இலங்கைக்கு 1939-ம் ஆண்டிற்கு முன்பதாகவே வந்து குடியேறியிருக்க வேண்டும். இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமை பதிவு செய்தல் 1949-ம் வருடத்திய சட்டமும் இக்கருத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இலங்கைப் பிரஜாவுரிமை 1948-ம் வருடத்திய சட்டத்தின் படி இந்தியரில் எவரும் 1939-ம் வருடத்திற்கு முன்னர் இலங்கையில் பிறந்திருந்து அவருடைய பிள்ளைகள் 1939 ம் வருடத்துற்கு பின்பு இலங்கையில் பிறந்திருந்தாலும் அவருடைய பிள்ளைகள் வம்சாவழி பிரஜையாவார்கள். மேலும் இந்தியர், பாகிஸ்தானியர் பிரஜா உரிமை பதிவு செய்தல் 1949-ம் வருடத்திய சட்டத்தின் கீழ் இலங்கையில் பிறந்த பிள்ளைகள் மனுதாரரோடு இலங்கைப் பதிவு பிரஜையாக பவுதி செய்யப்பட்டிருந்தால், இவ்வகையான பிள்ளைகள் இருபத்தியொரு (21) வயதை அடைந்ததும் தனித்தனியே வெளிவிவகார அமைச்சிற்கு மனுச்செய்து இலங்கை பிரஜாவுரிமை சட்டத்தின் கீழ் இலங்கை பிரசையாகிக் கொள்ளலாம்.

### 22 வர்த்தக ஒப்பந்தம்.

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான வர்த்தக ஒப்பந்தம் 1952-ம் ஆண்டு இரண்டு நாடுகளுக்கிடையில் கைச்சாத்தாகியது. இவ்வொப்பந்தமானது 1940-ம் ஆண்டு நடந்தேறிய பாஜ்பாய், சேனநாயகா பேச்சுக்களின் தீர்மானப்படி இலங்கையில் வாழும் இந்தியர்களின் நிலை குறித்து ஒரு முடிவெடுக்கப்பட்ட பின்னரேயே நடந்தேறியது. இவ்வொப்பந்தத்தின் கீழ் இருநாடுகளுக்குமிடையே நிலவிவந்த வர்த்தகத் தொடர்புகள் மீண்டும் புத்துயிர் பெறலாயின.

இரண்டாம் அத்தியாயம்

# இலங்கை அரசியலும் இந்தியர் நிலையும

### 1 சென்னை அரசின் கீழ் இலங்கை

கொழும்பு துறைமுகப்பட்டணம் ஒல்லாந்தர்களின் கையிலிருந்து ஆங்கிலேயர்கைக்கு 1796-ம் வருடம் பெப்ரவரி மாதம் மாறிற்று இதன் பின் இலங்கை, சென்னை அரசாங்கத்தின் ஆளுகைக் கீழ் கொண்டுவரப்பட்டது. படைத்தளபதிகளான மேஜர் ஜெனரல் மூவர் தனித்தனியே கொழும்பு, யாழ்ப்பாணம், காலி ஆகிய இடங்களுக்கு நியமிக்கப்பட்டார்கள். சென்னையிலிருந்து கொண்டுவரப்பட்ட 'டுபாஸ்கள்' வரி வசூலிக்க கையாண்ட முறை மிகவும் கொடூரமானதாக இருந்ததால் பல கோரளைகளில் 1797-ம் வருடம் கலகம் மூண்டது. இக்கலகத்திற்குப் பின்னர் இலங்கை சென்னை அரசின் மேற்பார்வையிலிருந்து தனித்தெடுக்கப்பட்டு இலங்கை ஆங்கிலேய அரசரின் பார்வைக்குட்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 காலனி ஆட்சி

இலங்கை பிரித்தானியக் காலனியானதும் இலங்கையின் முதல் தேசாதிபதியாக கௌரவ திரு. பிரடரிக் நோர்த் என்பவர் 1798-ம் வருடம் ஆங்கில அரசினால் நியமிக்கப்பட்டார். இவ்விதம் இலங்கை கி. பி. 1803-ம் வருடம் பிரித்தானிய காலனியாக்கப்பட்டது.

3 மாட்சிமைதங்கிய அரசசபை [His Majesty's Council]

முதன் முதலில் அமைக்கப்பெற்ற அரசசபை தேசாதிபதின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. இச்சபை பெரும்பாலும் தேசாதிபதிக்கு ஆலோசனை கூறும் சபையாகவே இருந்தது. இச்சபைக்கு இலங்கை சிவில் சேவையின் உயர்தர உத்தியோகத்தர்களே தேசாதிபதியால் நியமிக்கப்பெற்றூர்கள்.

4 கோல்புருக் கேமரன் வருகை

இச்சபை செயல்பட்டுக்கொண்டிருக்கையிலேயே இலங்கைக்கு 1829-ம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து லெப்டினன் கேனல் கோல்புருக்கும் திரு சார்ள்ஸ் H. கேமரனும் இலங்கையின் முறையே நிர்வாகத்தைப்பற்றியும் நீதி வழங்கும் முறையைப்பற்றியும் விசாரித்தறிந்து பிரித்தானிய அரசிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வந்தார்கள்.

5 புதிய சட்டசபையும் நீதிமன்றமும்

இவர்களின் அறிக்கையின்படி கி. பி. 1833-ம் ஆண்டு மாட்சிமை தங்கிய அரசசபைக்கலைக்கப்பட்டு புதிய சட்டசபையும், நீதிமன்றமும் ஏற்படுத்தப்பட்டன. இச்சட்ட சபையில் 1889-ம் ஆண்டு அரசாங்க சார்பற்ற அங்கத்தினர்களின் தொகை கூட்டப்பட்டது.

6 பொதுஜன வாக்குரிமை

இலங்கையருக்கு வாக்களிக்கும் உரிமைச்சட்டம் 24-9-1910-ம் திகதி சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.

7 புதியதோர் சட்டசபை

பொதுஜன வாக்குரிமை சட்டம் நிறைவேற்றப்பட்டபின் முதன் முதலாக புதியதோர் விதத்தில் பொதுத்தேர்தல் நடந்தது. புதிய சட்டசபை 12-1-1912-ம் திகதி கூட்டப்பட்டது. இதன்பின் மீண்டும் புதியதோர் அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் 1920-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் புதிய சட்டசபை இயங்கலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 மீண்டும் புதிய சட்டசபை

இப்புதிய அரசியல் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட புதிய சட்டசபை முதன் முதலில் 21-6-1921-ம் திகதி கூடிற்று:

9 இந்தியர் பிரதிநிதித்துவம்

இச்சட்ட சபையில் இந்தியர்களின் பிரதிநிதியாக ஆதமலி என்பவர் 27-7-1921-ம் திகதி தேசாதிபதியால் இந்தியர் நலம் பேண நியமிக்கப்பட்டார் இதன்பின் இந்தியர்களின் சார்பாக 1924-ம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட சட்டசபையில் திரு கோதாந்தர் நடேச ஐயர் 8-12-1925 ம் திகதி தேசாதிபதியால் நியமன அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

10 டோனமூர் கமிஷனர்கள் வருகை

டோனமூர் கமிஷனர்கள் இலங்கையின் சட்டசபையை மாற்றியமைக்கும் எண்ணத்தோடு 1927 ம் வருடம் இலங்கை வந்தார்கள். இவர்களே சட்டசபைக்கு புதிய உயிர் கொடுத்து தொகுதி வாரியாக அங்கத்தினர்கள் மக்கள் வாக்கினால் தேர்ந்தெடுக்கும் முறையை சிபார்சு செய்தவர்கள்.

11 இந்தியர் பிரதிநிதித்துவம்

1932 ம் ஆண்டு புதிதாக அமைக்கப்பட்ட ராஜ்ய சபையில் இந்தியர்களின் தெரிவுப் பிரதிநிதியாக திரு. பெ. சுந்தரம் அட்டன் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 4-5-1931 ம் திகதி பதவியேற்றார். இவர் தொழில், கைத்தொழில், வர்த்தக மந்திரியானார்.

திரு S. P. வைத்திலிங்கம் 18-6-1931 ம் திகதி தலவாக்கொல்லை அங்கத்தினராக தெரிவுசெய்யப்பட்டார். திரு முகமது காலிட் சால்தீன் என்பவர் 26-6-1931 ம் திகதி நியமன அங்கத்தவரானார். மீண்டும் 1936 ம் வருடம் கூடிய ராஜ்ய சபையில் கோதாந்தம் ராமையர் நடேசஐயர் அட்டன் தொகுதி அங்கத்தவராக 2-3-1936 ம் திகதி தெரிவுசெய்யப்பட்டார். திரு. S. P. வைத்திலிங்கம் 5-3-1936ம் திகதி தலவாக்கொல்லை அங்கத்தினராக தெரிவுசெய்யப்பட்டார்.

12 சோல்பரி கமிஷனர்கள் வருகை

இதன்பின் இலங்கையர்களின் அரசியல் உரிமைக்கிளர்ச்சியினால் இலங்கையர்களுக்கு நிர்வாக அலுவல்களில் அதிக உரிமை கொடுக்குமாறு லோட் சோல்பரி தலைமையின் கீழ் ஆங்கில அரசு இலங்கையின் அரசியல் சட்டத்தை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு 1944 ம் ஆண்டு இலங்கைக்கு ஒரு கோஷ்டியை அனுப்பியது இக்கோஷ்டியினர் தங்களது அறிக்கையை 1945 ம் வருடம் வெளியிட்டனர்

13 இந்தியர் பிரதிநிதித்துவம்

இவர்களின் அறிக்கையின்படி புதிய அரசியல் சட்டம் இயற்றப்பட்டு ராஜ்ய சபை கலைக்கப்பட்டு புதிய பாராளுமன்றம் ஏற்படுத்தப்பட்டது. இப்பாராளுமன்றம் இருசபைகளைக் கொண்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகள் மக்கள் பிரதிநிதிகள் சபை, மூதவை என அழைக்கப்படுகின்றன. இச்சபைக்கான பொதுத்தேர்தல் 1947 ம் வருடம் நடந்தது. இப்பொதுத்தேர்தலில் ராஜ்ய சபை அங்கத்தினராக இருந்த திரு S. P. வைத்திலிங்கம் போட்டியிடவில்லை, இப்பாராளுமன்றத் தேர்தலில் இந்தியர்களின் பிரதிநிதிகளாக கீழ்க்கண்டோர் தொகுதி வாரியாக தெரிவுசெய்யப்பட்டனர்:

| | தொகுதி | பெயர் |
|---|---|---|
| 1 | கொட்டகலை | K. குமாரவேலு |
| 2 | மஸ்கெலியா | G. R. மோதா |
| 3 | நாவலப்பிட்டியா | K. ராஜலிங்கம் |
| 5 | தலவாக்கொலை | C. V. வேலுப்பிள்ளை |
| 4 | நுவர எலியா | V. E. K. R. S. தொண்டமான் |
| 6 | பதுளை | S. M. சுப்பையா |
| 7 | அலுத்நுவரை | D. ராமானுஜம் |

இலங்கை மூதவைக்கு திரு. P. சுந்தரம் நியமிக்கப்பட்டார். இவர் மூதவையின் உப அக்கிராசனராகவும் நியமிக்கப்பட்டார்: திரு. பெரியண்ணன் சுந்தரம் 3-2-1957 ம் திகதி காலமானார்.

## 14 இந்தியர் வாக்குரிமை பறிபோதல்

1952 ம் வருடத்தில் நடந்த பொதுத்தேர்தலில் இந்தியர்களின் வாக்களிக்கும் உரிமை பறிக்கப்பட்டது. இதனால் இந்தியர்களில் எவர்களும் தேர்தலுக்கு நிற்க இயலாமற் போயிற்று. 1953 ம் ஆண்டில் திரு S. P. வைத்திலிங்கம் மக்கள் பிரதிநிதிகள் சபையின் நியமன அங்கத்தவரானார்.

1956 ம் வருடத்தில் நடந்த பொதுத்தேர்தலிலும் இந்தியர்களில் எவரும் போட்டியிடவில்லை

1960 ம் வருடத்தில் மார்ச் மாதத்தில் நடந்த பொதுத்தேர்தல்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அங்கத்தினர்கள் போட்டியிட்டுத் தோற்றார்கள். பின்பு யூலை மாதம் அதே வருடம் நடந்த தேர்தலில் இந்திய இனத்தாரில் யாரும் போட்டியிட முன்வரவில்லை.

## 15 மீண்டும் இந்தியர் நியமனம்

திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா பிரதம மந்திரியானதும் இந்தியர்களின் பிரதிநிதியாக ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு திரு S. தொண்டமான் 1960 ம் ஆண்டு நியமனப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்

திரு டட்லி சேனநாயகா அரசாங்கத்தில் இந்தியர்களின் நலனுக்காக ஜனப்பிரதிநிதிகள் சபையில் இலங்கை தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த திரு S. தொண்டமான் திரு V. அண்ணாமலை ஆகியோர் நியமன அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மூதவைக்கு இந்தியர்களின் பிரதிநிதியாக திரு. R. ஜேசுதாசனும் திரு S. நடேசனும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் அத்தியாயம்

# இந்தியர் சமுதாயம்

## 1 இந்தியரின் வாழ்க்கை பிரச்சினை

முதன் முதலில் கி. பி. 1827 ம் ஆண்டில் 300 தொழிலாளர்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டார்கள். இவர்களின் தொடர்ச்சியான வருகை கி பி 1839 ம் ஆண்டில் தொடங்கி கி. பி. 1939ம் ஆண்டு முடிவடைந்தது. இவ்விடைக்காலத்திலேயே இலங்கையிலுள்ள இந்தியர்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை தொடங்கிற்று இலங்கையில் வேலை செய்ய வந்த தொழிலாளர்களுக்கு உதவியாக வியாபாரிகளும், ஆசாரிமார்கள், செட்டிமார்கள் ஆகியோரும் இந்தியாவிலிருந்து வந்தார்கள்.

## 2 மகாத்மா காந்திவருகை

இலங்கைக்கு முதன் முதலாக மகாத்மா காந்தி அவர்கள் தாங்கள் இந்தியாவில் நடத்தும் சத்தியாகிரகத்திற்கு நிதிதிரட்டும் முகமாக 1927 ம் ஆண்டு வந்தார்கள்.

## 3 இலங்கை இந்தியக் காங்கிரஸ்

திரு ஜவஹர்லால் நேரு அவர்கள் 1939 ம் வருடம் இலங்கை வந்தார்கள். இலங்கையில் வாழும் இந்தியர்களின் வாழ்க்கை நிலை மிகவும் மோசமாக இருந்ததால் இலங்கையில் வசிக்கும் இந்தியர்களின் கூட்டுறவுடன் 'இலங்கை இந்தியக் காங்கிரஸ்' என்றும் ஸ்தாபனம் இந்தியரின் நலன் கருதி 25-7-1939 ம் திகதி திரு. நேரு அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.

இலங்கை இந்தியக் காங்கிரஸின் கிளையாக திரு P. சுந்தரம் அவர்களால் 1940 ம் ஆண்டு 'இலங்கை இந்தியக் காங்கிரஸ்' தொழில் சங்கம் என்னும் ஸ்தாபனம் அப்புத்தலையிலுள்ள ஸ்ரீ கதிரேசன் கோவிலில் வைத்து தொடங்கிவைக்கப்பட்டது. இக்கிளையின் முக்கிய வேலை தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களை இக்கிளையின் கீழ் கொண்டுவருவதேயாகும்

## 4 பெயர் மாற்றம்

இலங்கை இந்தியக் காங்கிரஸின் 14 வது மாநாடு கம்பளையில் 2-5-1954 ம் திகதி நடந்தது. இம்மகாநாட்டுடன் 'இலங்கை இந்தியக் காங்கிரஸ்' புதிய பெயரான 'இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் என்னும் பெயரால் அழைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5 தொழிற் சங்கத்தில் பிளவு

இலங்கை ஜனநாயக காங்கிரஸைச் சேர்ந்தவர்களும் காங்கிரஸின் முக்கியஸ்தர்களுமான திரு. S தொண்டமானுக்கும் திரு A. அசீசிற்கும் இடையில் கொள்கை பிளவு ஏற்பட்டது. இதனால் இலங்கை ஜனநாயக காங்கிரசில் பிளவு ஏற்பட்டது திரு S. தொண்டமான் தலைமையின் கீழ் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்னும் தொழிற்சங்கமும், திரு. A. அசீசின் தலைமையின் கீழ் 'இலங்கை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்னும் தொழிற்சங்கமும் தனித்தனியே 1956ம் ஆண்டு முதல் இயங்கத் தொடங்கின. இதன் பின் 1965ம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரசில் அங்கம் வகித்த திரு. A K. வெள்ளையன் தனது தலைமையின் கீழ் இலங்கை தேசிய தொழிலாளர் சங்கம் என்னும் புதிய தொழிற் சங்கத்தை ஏற்படுத்தியுள்ளார்.

### 6 அரசியல் நிதி

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதன் இன்னோர் அம்சமாக 'Political Fund' 'அரசியல் நிதி' ஒன்றை ஏற்படுத்தி தொழிலாளர்களிடமிருந்து மாதம் ஐந்து சதம் இந் நிதிக்குப் பெறுகின்றது. இந் நிதியின் முழு நோக்கம் தொழிலாளர்களின் பிரஜாவுரிமை, மொழி ஆகியவற்றை பாதுகாப்பதேயாகும். (Vide Report of the Commission on Monte Cristo Estate, Nawalapitiya SPP XV of 1962)

### 7 இலங்கைப் பிரஜாவுரிமை சட்டம்

இலங்கைப் பிரஜாவுரிமை சட்டம் 15/11/1948ம் திகதி அமுலுக்கு வந்தது. வம்சாவழி பிரஜைகளெல்லாம் இதன் கீழ் அடங்குவார்கள்.

### 8 இலங்கையின் சுதந்திரம்

இலங்கைக்கு சுதந்திரம் 4-2-1948ம் திகதி கிடைத்தது. இலங்கை இப்போது சாம்ராச்சிய நாடுகளின் சபையில் அங்கத்துவம் பெற்றிருக்கிறது.

### 9 குடியிருப்பு

கண்டிய விவசாயக்கமிஷன் அறிக்கை தொழிலாளர்கள் வாழும் 'லேன்கள்' சுகாதார வாழ்விற்கு ஏற்றதல்ல என்று கூறுகிறது. அஸ்ஸாம் ராஜ்யத்திலுள்ள தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு இரண்டு விதமான வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருவகையான குடியிருப்பு வசதி இலங்கைத் தோட்டங்களில் உள்ளது போலாகும். மற்றது தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள காணி வழங்கி நிதி வசதி போன்ற வேறு வசதிகளும் செய்வதாகும். இவ்விபரம் இலங்கையிலுள்ள தோட்டத் தொழிலாளர்களின் குடும்பம் நடத்தும் விதம் எத்தகையது என்று தொழில் இலாக்காவினால் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையின் 56-ம் பத்தியில் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 தோட்டத் தொழிலாளரும், உள்ளூராட்சி மன்றங்களும்

ஆங்கிலேய இந்தியப்பிரதிநிதியாக இருந்த திரு. மேனன் 1933ம் ஆண்டளவில் தோட்டத் தொழிலாளர்கள் கிராமசபை தேர்தல்களில் பங்கெடுப்பதை எதிர்த்தார். இவர் இதற்குக் கூறிய விளக்கம் தொழிலாளர்கள் தோட்டங்களில் தனித்த வாழ்க்கை நடத்துகிறார்கள் என்றும், தோட்ட நிர்வாகங்கள் பல வழிகளில் பாதுகாப்பும், அரசாங்கம் சட்டங்கள் மூலம் தகுந்த பாதுகாப்புகளும் அளிக்கின்றனர் என்றும் கிராம மக்களின் வாழ்க்கை, சூழ் நிலை தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை முறைகளிலிருந்து முற்றும் வேறுபட்டது என்றும் சுட்டிக்காட்டினார். இதனால் கிராமசபை தேர்தல்களில் தொழிலாளர்கள் கலந்துகொள்வதற்கு சந்தர்ப்பமளிக்கப்படவில்லை. இன்றும் தொழிலாளர்கள் கிராமசபைத் தேர்தல்களில் வாக்களிக்குமுரிமை கிடைக்காமல் இருக்கிறார்கள்.

## 11 இந்தியத் தொழிலாளர் குடியேற்றுசபை

இந்தியத் தொழிலாளர் நலன் கருதி (Board of Indian Imigrant Labour) இந்தியத் தொழிலாளர் குடியேற்று சபை தொழில் மந்திரியின் கீழ் இயங்கிவருகின்றது இந்த சபையின் அங்கத்தினர்களின் வேலை இலங்கைத் தோட்டங்களில் தொழில் செய்யும் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொள்வதேயாகும்.

## 12 சம்பள நிர்ணயச் சபைகள் (Wages Boards)

தேயிலை, ரப்பர், கொக்கோ, தென்னை மற்றும் பல தொழில் துறைகளுக்கும் சம்பள நிர்ணயச் சபைகள் இயங்குகின்றன இச் சபைகள் அனைத்தும் தொழில் மந்திரியின் கீழே இயங்குகின்றன. இச்சபைகளின் மூலம் காலத்திற்குக்காலம் அடிப்படை நாள் சம்பளம் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்படுகிறது

## 13 தோட்டப்பயிர்கள்

a கோப்பி பயிர்செய்கை பழங்காலத்திலிருந்தே இலங்கையில் உண்டாக்கப்பட்டு வந்தாலும் 1827ம் ஆண்டு தொடக்கமே முறையான பயிர்ச்செய்கைக்கு வழிவகுக்கப்பட்டது. கோப்பிப் பயிர்ச்செய்கை 1870 ம் ஆண்டு உச்சகட்டத்தை அடைந்தது.

b கொக்கோ பயிர்ச்செய்கை 1872 ம் ஆண்டிலேதான் முதன் முதலில் இலங்கையில் தொடங்கிற்று

c தேயிலை பயிர்ச்செய்கை இலங்கையில் 1873 ம் ஆண்டிலிருந்துதான் முறையாக உண்டாக்கப்பட்டது. முதன் முதலாக பரீட்சார்த்தமாக 1867 ம் ஆண்டு 10 ஏக்கர் நிலத்தில் தேயிலை பயிரிடப்பட்டது.

d தென்னம் பயிர் செய்கை 1841 ம் ஆண்டு முதன் முதலில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களில் முறையான ரீதியில் பயிரிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

e ரப்பர் பயிர்ச் செய்கை இலங்கையில் 1876 ம் ஆண்டளவில் முறையான அடிப்படையில் தொடங்கிற்று.

## 14 தொழிலாளர் கல்வி

தோட்டங்களில் வாழும் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி தேவைப்பாட்டுக் குறையை நீக்குமுகமாக தோட்டமக்களிடையே புதியதோர் கிளர்ச்சி உண்டாயிற்று. இதன் பயன் 1903 - 4 ம் ஆண்டளவில் ஒரு விசாரனை நடைபெற்று தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுடைய கல்வி சம்பந்தமான ஒரு அறிக்கை 1905 ம் வருடம் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையின் ஆலோசனையின்படியே 1907 ம் ஆண்டு தோட்டக் கல்வி சட்டம் நிறைவேற்றப்பட்டது. தோட்டங்களில் பாடசாலைகள் அறுபது (60) 1904 ம் ஆண்டளவில் இருந்தன. இவைகளில் இரண்டு அரசாங்கத்தினுடையது ஐம்பத்தியெட்டு பாடசாலைகள் அரசாங்க உதவி பெற்று நடத்தப்பட்டன. இப்பாடசாலைகளில் 1936 மாணவரும் 203 மாணவிகளும் கல்வி கற்றனர் அரசாங்க உதவிபெற்ற 227 பாடசாலைகள் 1910 ம் வருடம் இயங்கி வந்தன 1921 ம் ஆண்டு 269 உதவி பெற்ற தோட்ட பாடசாலைகள் இருந்தன 1964 ம் ஆண்டு 866 தோட்டப்பாடசாலைகள் இருந்தன. 1964 ம் ஆண்டு 866 தோட்ட பாடசாலைகளிலும் 81695 மாணவ மாணவிகள் கல்வி கற்று வந்தனர். இவற்றில் ஆண்கள் 49650 பேரும் பெண்கள் 32045 பேரும் ஆகும். 81695 மாணவ மாணவிகளுக்கு 1,103 ஆசிரியர்களே இருந்தனர். சராசரி கணக்குப் படி. ஒரு ஆசிரியனுக்கு 74 பிள்ளைகள் விதம் தோட்டப் பாடசாலைகளில் கல்வி பயின்றனர். இந்த விகிதம் இலங்கையில் வேறு எங்கும் இல்லை இதுவே இலங்கையின் ஆகக் கூடிய ஆசிரியர் மாணவர் விகிதமாகும் (Census of Population, Ceylon, 1963)

## 15 தொழில் கோடுகள்

தோட்ட முதலாளிமார்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையில் சம்பளம் அல்லது வேலை நீக்கம் மற்றும் தொழிலாளி பாதிக்கப்படும் எந்த விஷயங்களிலும் தொழிலாளியின் கோரிக்கையின் பேரில் தொழில் கோடு நீதவான்கள் முதலாளிமார்களை விசாரனை செய்து நீதிவழங்குகின்றனர்.

## 16 மலைகள் கதை சொல்லும்

இவை அத்தனையும் இருந்ததும் தொழிலாளர்கள் செய்த தியாக வாழ்க்கைக்கு இன்னும் போதியளவு சன்மானமளிக்கப்படவில்லை. இந்தியத் தொழிலாளர்கள் முதன் முதலில் இலங்கைத் தோட்டங்களில் வேலை செய்ய வந்த நாள் முதல் இறுதியாக வேலை செய்த நாள் வரையுள்ள இடைக்காலமே தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையையுணர்த்தும் நிலை கண்ணாடியாக இருக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. மலை, மடு என்று பாராது காடுகளினூடே போக்குவரத்திற்கு சாலைகள் அமைக்கப்படாத காலத்தில் கால் நடையாக தான் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்கு வரும்வழியில் பலர் மலேரியா காய்ச்சலுக்கும், வாந்தி பேதி, காலரா ஆகிய கொடிய நோய்களுக்கும் இரையாக நேரிட்டது. மேலும் தோட்டங்களில் பயிர்ச் செய்கை உண்டாக்குவதற்கு காடுகளை அளிக்க முற்பட்ட நேரத்தில் கொடிய விஷ ஜந்துக்களின் சீற்றத்திற்கும் பல பேர் பலியானுர்கள். இவ்விதக்கண்டங்களையெல்லாம் கடந்து தன்னை எந்நாளும் காத்து வரும் அம்மனுக்கு ஒவ்வொரு தோட்டங்களிலும் ஆலயம் அமைத்து திருவிழாக்கொண்டாடுகிருர்கள்.

தொழிலாளர்களின் முக்கிய பண்டிகைகளாக தீபாவளி, தைப் பொங்கல், மார்கழி காமன் கூத்து ஆகியன தோட்டங்களில் வெகு சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன. தோட்ட நாட்டுப்பாடல்கள் பலவிதக் கருத்துக்களை அள்ளி வீசுவனவாய் இருக்கின்றன இவை யெல்லாம் தனியாக ஆராயப்படவேண்டியவையாகும். இவர்களைத்விர்த்து இலங்கைக்கு வியாபாரம் செய்ய வந்த நாட்டுக்கோட்டை செட்டியார்கள் கடவுள் வழிபாட்டை எல்லா மக்களுக்கும் என்றும் நினைவுறுத்துமுகமாக பல ஊர்களில் கோவில்களை கட்டியுள்ளார்கள். இவைகளைப் பற்றியெல்லாம் இலங்கையின் மலைகள் கதையாக என்றென்றும் சொல்லிக்கொண்டேயிருக்கும்.

முற்றும்


படித்துப்பாருங்கள்!

இவ்வாசிரியர் ஆக்கியுள்ள

"இந்துமதமும் கடவுள்கள் வரலாறும்"

இது ஓர் வரலாற்று நூலாகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் கதை சொல்லும்

| காலம் | சம்பவம் |
|---|---|

கி. மு. 2000

இக்காலத்திலேயே இந்தியாவின் தென்பகுதியிலுள்ள தச்சனப் பிரதேசத்திலிருந்து வேட்டையாடியும் மீன்பிடி தொழில் செய்தும் வாழ்வு நடத்தின காட்டுமனிதர்கள் தென் இந்தியாவின் தென் கோடியில் அமைந்திருக்கும் 'ராமர் பாலம்' என்றழைக்கப்படும் சிறு சிறு திட்டுக்களின் ஊடாக இலங்கை வந்தார்கள். (Ancient Ceylon by H. Parker)

கி. மு. 483

சிங்களவர் இனத்தைத் தோற்றுவித்த 'விஜயன்' புத்தளம் கடற்கரையை 700 ஆட்களுடன் வந்தடைத்தார்.

கி. மு. 300

கிரேக்க நாட்டு தூதுவராக சந்திரகுப்தனின் அரச சபையில் அங்கம் வகித்த 'மெகஸ்தீனஸ்' என்னும் கிரேக்க நாட்டவர் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் ஒரு ஆறு ஓடுவதைக் கண்டதாக தனது குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளார் இக்குறிப்பு அக்காலத்தில் இருந்த கடலின் நிலையை குறிப்பதாக அமைந்திருக்கிறது. (Ancient Jaffna by C. Rasanayagam)

கி மு. 204

தென்னிந்தியாவிலிருந்து தமிழர் என்ற அடிப்படையில் மக்கள் கூட்டமொன்று இலங்கையின் வடபகுதியில் குடியேறியது:
(Encylopaedia Brittanica Vol-12 Jaffna)

கி. பி. 436

நான்காம் முறையாக தமிழர் படையெடுப்பு நடந்தது. இவர்களின் ஆட்சி 27 வருடங்கள் நடைபெற்றது.

கி. பி. 769

ஏழாம் அரசேபாதி காலத்தில் தமிழ்நாட்டு மன்னர்களின் இடைவிடாத படையெடுப்புக்களினின்று பாதுகாப்புத்தேட தலைநகரம் அனுராதபுரியிலிருந்து பொலனறுவைக்கு மாற்றப்பட்டது.

கி. பி. 846—கி. பி. 866

முதலாம் சேனன் காலத்தில அனுராதபுரத்தின் மீது பாண்டியர் படையெடுப்பு நடந்தது.

கி. பி. 1017

சோழர் படையெடுப்பு நடந்து பொலனறுவை கைப்பற்றப்பட்டது. பொலனறுவை 'ஜனநாதபுரம்' என்று பெயர் மாற்றப்பட்டது. சோழர் பிரதானிகளால் 50 வருட காலம் சோழநாட்டு மாகாணமாக இலங்கை ஆளப்பட்டது.

கி. பி 1153

பராக்கிரமபாகு மாயாரட்டையின் மன்னரானார். இவர் முதலாம் விஜயபாகுவின் பேரனாவார். 'மித்திரை' பாண்டிய இளவரசனை மணமுடித்தார் பாண்டிய இளவரசரின் மகனே மானபரனன் என்பவராகும் மானபரனன் வீரபாகு என்ற பெயரைச் சூட்டிக் கொண்டார். வீரபாகுவின் மகனே மகா பராக்கிரமபாகுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் ராஜரட்டை, ருகுனரட்டை, மாயாரட்டை ஆகிய மூன்று ராச்சியங்களையும் இணைத்து இலங்கையின் மன்னரானார். இவர் காலத்தில் சோழ மன்னர்கள் தோற்கடிக்கப்பட்டு இராமேஸ்வரமும் அதைச் சார்ந்த மாவட்டங்களும் இலங்கையுடன் இணைக்கப்பட்டது.

கி. பி. 1215

கலிங்கத்து தேச அரசன் 24000 கேரள சிப்பாய்களுடன் இலங்கையின் மேல் படையெடுத்து இலங்கையைக் கைப்பற்றினார்.

கி. பி. 1302—1310

பாண்டியர் இலங்கையின மீது படையெடுத்து 'யாப்பாகுவை' கைப்பற்றி புனிதப் பல்லை பாண்டிய நாட்டிற்கு எடுத்துச் சென்றனர். இப்பல் சமாதான முறையில் திருப்பிக்கொடுக்கப்பட்டது;

கி. பி 1341

கம்பளையில் தலைநகரம் ஏற்படுத்தப்பட்டது

கி. பி. 1477

கோட்டையில் தலைநகரம் ஏற்படுத்தப்பட்டது.

கி. பி 1505—1658

போர்த்துகேயர் காலம். இக்காலத்தில் 'சால்செட்' என்னும் இடத்திலிருந்து மக்கள் கூட்டம் இலங்கையின் நீர்கொழும்பு மாவட்டத்தில் கோவாவிலிருந்த போர்த்துகேய தேசாதிபதியால் குடியேற்றப்பட்டது. இவர்களே இப்போது இருக்கும் வருணகுலசூரிய, குருகுல சூரிய, மிகுந்துகுல சூரிய என்னும் தமிழ் பேசும் சிங்களவராவர். (Ceylon & Tamils by C S Navaratnam)

கி. பி. 1547—1582

கரலியத்த பண்டார என்பவர் கண்டிய அரசராக இருந்தார். இவர் பட்டத்திற்கு வந்தபிறகு சூட்டிக்கொண்ட பெயர் விக்ரமபாகு ஆகும். இவரின் மகளே 'டோனு கதரினு' என்பவளாகும். மருமகனின் பெயர் 'டொண் பிலிப்' என்பதாகும்

கி. பி. 1580

முதலாம் ராஜசிங்கன் கண்டியை தனது ராஜதானியோடு சேர்த்துக்கொண்டார்.

கி பி. 1582

ராஜசிங்கன், வீரசுந்தர என்ற கண்டிய பிரதானிகளில் ஒருவரின் துணைகொண்டு கண்டிய ரகசியத்தை கைப்பற்றினார். வீரசுந்தரரவை முதலாம் ராஜசிங்கன் சந்தேகத்தின் பேரில் கொன்றுவிட்டார்.

கி. பி. 1583

முதலாம் ராஜசிங்கன் இந்துமதத்தை தழுவினார். இவர் கோட்டையைத் தலைநகராக்கிக்கொண்டிருந்தார்.

கி. பி. 1588

போர்த்துகேயர், தன் தகப்பனைக் கொன்ற இராஜசிங்கனுக்கெதிராக 'கோனப்பு பண்டாரா' என்பவரை டொன் பிலிப்புடன் கண்டிக்கு அனுப்பினர். கோனப்பு பண்டாரன் போர்த்துகேயரின் பட்டாளத்தில் வேலைப்பார்க்கும் சிப்பாயாகும்.

கி. பி 1592

போகும் வழியிலேயே நஞ்சூட்டப்பட்டு டொன் பிலிப் கொல்லப்பட்டார்; கோனப்பு பண்டாரன் தானே கண்டிய அரசன் என்று பிரகடனப்படுத்திக் கொண்டான். இவனுக்குப் பிறகேயே 'கண்டிய சிங்களவர்' என்னும் புதிய இனப்பெயர் ஏற்படலாயிற்று. இவன் பட்டத்திற்கு வந்ததும் சூட்டிக்கொண்ட பெயர் 'விமலதர்மசூரிய' என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 1594

போர்த்துக்கேயர் கண்டிய சிம்மாசனத்தில் அமர்த்த இருந்த 'டொனு கதரினுவை' கோணப்பு பண்டாரன் மணந்து கொண்டார்.

கி. பி 1600

விமலதர்மசூரிய அரசர் கண்டிய அரச மாளிகையைக் கட்டு வித்தார்.

கி. பி. 1627

கண்டிய அரசர் விமலதர்மசூரிய இறந்தவுடன் இவரின் 'சகோதரன் சேனரத்' என்பவர் கண்டிய சிம்மாசன மேறினர்!

கி. பி. 1634

சேனரத் இறந்தவுடன் இவரின் மகனுன இரண்டாம் ராஜசிங்கன் கண்டிய சிம்மாசன மேறினர். சேனரத் காலத்தில் கண்டிய ராச்சியம் மூன்ருகப் பிரிக்கப்பட்டு மூன்று மகன்களுக்கும் கொடுக்கப் பட்டது. ஒருவருக்கு மாத்தளையும், மற்ருெருவருக்கு உவாவும் கடைசி மகனுக்கு கண்டியையும் கொடுத்தார்.

கி. பி 1656-1796- டச்சுக்காரர் காலம்.

இக் காலத்தில் இந்தியாவின்தென் பகுதியிலிருந்து ஒல்லாந்தர் தேசாதிபதியால் இலங்கையில் நெத்பயிர்ச் செய்கை செய்யும் பொருட்டு தமிழர்கள் கொண்டுவரப்பட்டு குடியேற்றப்பட்டனர்.
( Ceylon & Tamils by C. S Navartnam )

கி. பி. 1684

இரண்டாம் ராஜசிங்கன் இறந்தார். இவருக்குப்பின் இரண்டாம் விமலதர்மன் கண்டிய சிம்மாசன மேறினர்.

கி. பி. 1706

ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திர சிங்கன் கண்டிய மன்னரானர்.

கி. பி. 1739

ஸ்ரீ விஜய ராஜசிங்கன் கண்டிய மன்னரானர்.

கி. பி. 1747

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் கண்டிய மன்னரானர்

கி. பி. 1775

முதன் முறையாக புத்தரின் புனிதப்பல் நான்கு தெய்வங்களின் சின்னங்களோடு ஊர்வலமாக கண்டி வீதிகளில் எடுத்துச் செல்லப் பட்டது.

கி. பி. 1780

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் கண்டி வீதிகளில் குதிரைமேல் வரும் போது இடறி விழுந்து இறந்தார். இவருக்குப்பின் ராஜாதி ராஜ சிங்கன் கண்டிய மன்னரானர்,

கி, பி. 1798

ராஜாதி ராஜசிங்கன் இறந்தார், இவருக்குப்பின் ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கன் கண்டிய மன்னரானர், இவரின் முதற்பெயர் கண்ணுசாமி என்பதாகும்.

கி. பி. 1803

ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் கண்டிய சிம்மாசனத்தை விட்டு ஓடி தலை மறைவாக இருந்ததினுல் ஆங்கிலேயர்கள் முத்துசாமியை கண்டிய மன்னராக்கினர்
கண்டியை மீண்டும் கைப்பற்றிய சிங்களவர் ஆங்கிலேயரிடமிருந்து மூத்துசாமியை மீட்டிவந்து கொன்றுவிட்டனர்.
கண்டியில் தங்கியிருந்த ஆங்கிலேய படைகள் ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கனல் கொலை செய்யப்பட்டனர்; மேஜர் டேவியும், கோபால் ரம்லியும் மன்னரின் பரிதாபத்திற்குள்ளாகி உயிர் தப்பினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 1806

கண்டிய மன்னரால் தெப்பக்குளம் கட்டப்பட்டது.

கி. பி. 1815

கண்டிய மன்னரின்மேல் ஆங்கிலேயர் யுத்தப் பிரகடனம் செய்தனர். இத்துடன் இலங்கையில் சிங்கள மன்னராட்சி முடிவடைந்தது

கி பி 1815

கண்டிய மந்திரிபிரதானிமாருக்கும் தேசாதிபதி ரொபட் பிரவுன்ரிக் அவர்களுக்குமிடையில் கண்டிய ஒப்பந்தம் கைச்சாத்தாகியது

கி பி. 1818

1817-ம் வருடம் அக்டோபர் மாதம் நடந்த கண்டிய புரட்சியின் பின் கண்டிய ராச்சியம் ஆங்கிலேயர் ராஜதானியின் ஒரு பகுதியாக ஆக்கப்பட்டது.

கி பி. 1821

முதன் முதலில் கண்டிய மலைப்பகுதி நிலங்கள் விற்பனைக்குள்ளானது.

கி. பி 1847

கோப்பிப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலங்களின் பரப்பை அறிவதற்கான சட்டம் நிறை வேறியது.

கி. பி. 1859

இலங்கையில் இந்தியத் தொழிலாளர்கள் குடியேற்றும் சட்டம் நிறைவேறியது.

கி. பி. 1873

இந்தியத் தொழிலாளர்கள் அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுக் கொள்ளும் சட்டம் நிறைவேறியது.

கி. பி. 1894

இந்தியத் தொழிலாளர்கள் அரசாங்க வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறும் சட்டம் (1873) ரத்துச் செய்யப்பட்டது.

கி. பி 1900

தரிசு காணிகள் சுவீகரிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

கி. பி. 1907

நகரப்புரம் கிராமப்புரங்களுக்கான பாடசாலைகள் சட்டம் நிறைவேறியது.

கி பி. 1910

(1) வாக்குரிமை சட்டம் நிறைவேறியது.

(2) புதிய சட்ட சபைக்கான அரசியல் சட்டம் 13ம் இலக்கம் கொண்டது நிறைவேற்றப்பட்டது இச் சட்டப்படி இந்தியர்களுக்கு பிரதிநித்துவக் சட்ட சபையில் கிடையாது.

கி. பி 1921

தோட்டங்களில் கடை பிடிக்கப்பட்டு வரும் துண்டுகள் மூலம் வேலை கொடுக்கும் முறை' சட்டமூலம் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டது.

கி. பி 1927

(1) தோட்டத் தொழிலாளர்களுக்கான அடிப்படைச் சம்பள சட்டம் நிறைவேறியது.

(2) மகாத்மாகாந்தி அவர்கள் தாங்கள் இந்தியாவில் மேற்கொண்டிருக்கும் சத்தியாக்கிரகத்திற்கு நிதி திரட்டும் முகமாக இலங்கை வந்து சென்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 1936

Sir ஜெக்சன் என்பவர் ஆங்கில அரசினரால் இலங்கையில் குடியேற்றம் சம்பந்தமாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கு முகமாக இலங்கை அனுப்பப்பட்டார்.

கி. பி. 1938

Sir ஜெக்சனின் அறிக்கை வெளியிடப்பட்டது. Vide Report of a Commission on Immigration into Ceylon (Jackson Report) SPP III of 1938

கி. பி. 1946

கேகாலை நேவ்ஸ் மேர் தோட்ட ஹர்த்தால் 2-5-46 ல் தொடங்கி 11-7-46 ம் திகதி முடிவடைந்தது. காரணம் அரசாங்கம் இத்தோட்டத்தை சுவீகரித்து சிங்களவரை குடியேற்ற முயன்றதாகும்.

கி. பி 1949

இந்தியர் - பாகிஸ்தானியர் பிரஜாவுரிமை பதிவு செய்யும் சட்டம் நிறைவேறியது.

கி. பி. 1952

(1) பொதுத்தேர்தலில் இந்தியர்களின் வாக்களிக்கும் உரிமை பறிக்கப்பட்டதனால் இந்தியர்களில் யாரும் தேர்தலில் போட்டியிடவில்லை.

(2) இலங்கை-இந்திய வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்தாகியது.

கி. பி. 1954

(1) புதுடில்லியில் நேரு-கொத்தலாவலை ஒப்பந்தம் இந்தியர்கள் சம்பந்தமாக ஜனவரி மாதம் கைச்சாத்தாகியது.

(2) மீண்டும் ஓர் ஒப்பந்தம் ஒக்டோபர் மாதம் இலங்கைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இவ்வொப்பந்தம் கடும் விவாதத்தின் பின்னர் நிறைவேறாமல் தள்ளிப்போடப்பட்டது.

கி பி. 1958

தமிழ்மொழி நியாயமான அளவு பாவிக்கும் சட்டம் நிறைவேறியது.

கி. பி. 1964

இலங்கை-இந்தியர் பிரச்சனை சம்பந்தமாக இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரியுடன் பேச்சுக்கள் நடத்த திருமதி பண்டாரநாயகா புதுடில்லி சென்று வெற்றியுடன் நாடு திரும்பினார். ( Vide India Treaty Series No 5 of 1964 )

கி. பி. 1967

இலங்கை-இந்திய ஒப்பந்தம் (1964) சட்டமாக்கப்பட்டது.

கி. பி 1968

(1) இலங்கை-இந்திய சட்டத்தின் உபவிதிகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன

(2) இலங்கைப் பிரதமர் திரு டட்லி சேனநாயகா 27-11-68-ம் திகதி புதுடில்லி பயணமானார் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொள்ளப்படாத 150,000 நாடற்றவர்களின் தலைவிதி நிர்ணயிப்பதை பின்போடப்பட்டது. பிரதமர் 4-12-68-ம் திகதி நாடு திரும்பினார்.

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்புகள்

I இலங்கை இந்தியர் தோட்டத்தொழிலாளர் ஜனத்தொகை விபரம்

| வருடம் | ஜனத்தொகை |
|---|---|
| 1827 | 10,000 |
| 1846 | 80,000 |
| 1877 | 146,000 |
| 1910 | 450,000 |
| 1911 | 530,983 |
| 1921 | 602,734 |
| 1927 | 700,000 |
| 1931 | 692,540 |
| 1946 | 665,853 |
| 1953 | 809,084 |
| 1961 | 949,684 |

(Source: Statistical Abstract of Ceylon 1965, Ceylon Handbook Supplement 1927-page 4)

II இந்தியத் தமிழரின் விகிதாச்சாரம் மற்ற இனத்தவர்களை மாவட்டரீதியாக ஒப்பிடுகையில்

| மாவட்டம் | விகிதாச்சாரம் 1911 % | 1946 % | 1953 % |
|---|---|---|---|
| இலங்கை முழுவதும் | 12.93 | | 12 |
| கொழும்பு மாநகரசபை | 17.38 | 7.8 | 4.2 |
| கொழும்பு மாவட்டம் (மாநகரசபை தவிர) | 2.94 | | |
| களுத்துறை | 9 39 | 3.8 | 6.6 |
| கண்டி மாநகரசபை | 9.75 | 26.6 | 30.5 |
| கண்டி மாவட்டம் மாநகரசபை தவிர) | 36.54 | | |
| மாத்தளை | 28.95 | 4.4 | 20.2 |
| நுவரெலியா | 59.96 | 19.7 | 59.2 |
| யாழ்ப்பாணம் | .27 | 0 6 | 1.6 |
| மன்னார் | 5.82 | 0.5 | 18.3 |
| முல்லைத்தீவு | 3.41 | — | — |
| காலி மாநகரசபை | 1.23 | 0.9 | 2.1 |
| காலி மாவட்டம் (மாநகரசபைதவிர) | 1.47 | | |
| மாத்துறை | 1.17 | 1.0 | 2.8 |
| அம்பாந்தோட்டை | .28 | 0.0 | 0.1 |
| மட்டக்களப்பு | .37 | 0.2 | 0.7 |
| திருகோணமலை | 1.08 | 0.4 | 4.1 |
| குருணாகலை | 3.33 | 1.0 | 1.6 |
| புத்தளம் | 6 41 | 0.0 | 1 8 |
| சிலாபம் | 4 65 | 0.6 | 3 6 |
| அனுராதபுரம் | 3.42 | 0.4 | 1.5 |
| பதுளை | 32.25 | 16.3 | 35.6 |
| இரத்தினபுரி | 15.60 | 9 1 | 20.7 |
| கேகாலை | 23 68 | 6.7 | 12.4 |
| வவுனியா | — | 0.0 | 6.7 |

(Source: Ceylon at the Censas of 1911 and statistical Abstract of 1965)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## III தோட்டப்பகுதிகளில் வாழும் இந்தியத் தமிழர்கள் மாவட்ட ரீதியாக 1963-ம் வருடம் நடந்த பொதுக்கணக்கெடுப்பின்படி

| மாவட்டம் | பதிவுப் பிரஜைகள் | | | இலங்கை பிரஜைகள் அல்லாதார் |
|---|---|---|---|---|
| | மொத்தம் | இந்தியத்தமிழர் | ஏனையோர் | |
| இலங்கை | 106.020 | 104,850 | 1170 | 839,360 |
| கொழும்பு | 1560 | 1520 | 40 | 4030 |
| களுத்துறை | 5940 | 5920 | 20 | 30,660 |
| கண்டி | 31,590 | 31,180 | 410 | 226.800 |
| மாத்தளை | 5110 | 5080 | 30 | 32,960 |
| நுவர-எலியா | 24,880 | 24,630 | 250 | 192,350 |
| காலி | 1560 | 1550 | 10 | 9800 |
| மாத்தறை | 1490 | 1490 | — | 13,140 |
| அம்பாந்தோட்டை | — | — | — | — |
| யாழ்ப்பாணம் | — | — | — | — |
| மன்னார் | — | — | — | — |
| வவுனியா | — | — | — | — |
| மட்டக்களப்பு | — | — | — | 50 |
| அம்பாறை | — | — | — | 10 |
| திருகோணமலை | 20 | 20 | — | — |
| அனுராதபுரம் | — | — | — | — |
| பொலநறுவை | 10 | 10 | — | 4820 |
| குருணாகலை | 1420 | 1390 | 30 | 440 |
| புத்தளம் | 120 | 120 | — | 169,140 |
| பதுளை | 14100 | 14010 | 90 | 9720 |
| மொனராகலை | 460 | 460 | — | 94,960 |
| ரத்தினபுரி | 6140 | 6160 | 180 | 50,480 |
| கேகாலை | 11420 | 11,310 | 110 | |

Source: Census of Population Ceylon 1963

## IV இலங்கையில் உள்ள இந்தியர்கள் இந்தியாவில் பிறந்த இடங்கள் கீழ்த்தரப்படுகின்றது.

1911-ம் வருட நிலை

| இடம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| பலுசிஸ்தான் | 4 | — | 4 |
| வங்காளம் | 145 | 120 | 265 |
| பம்பாய் | 829 | 347 | 1176 |
| பர்மா | 38 | 24 | 62 |
| மத்திய மாகாணமும் பீராரும் | 13 | 8 | 21 |
| கூர்க் | 3 | — | 3 |
| ராஜதானி | 190060 | 165,399 | 355,459 |
| ஆனந்பூர் | 58 | 79 | 137 |
| பெல்லாரி | 184 | 145 | 329 |
| செங்கல்பட்டு | 3346 | 2872 | 6218 |
| கொச்சின் | 263 | 163 | 426 |
| கடப்பா | 314 | 251 | 565 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இடம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| வடமேற்கு | | | |
| எல்லை மாகாணம் | 199 | 110 | 309 |
| பஞ்சாப் | 341 | 367 | 708 |
| ஆக்ரா-ஊத் | | | |
| ஐக்கிய மாகாணம் | 3 | — | 3 |
| கோவா | 4 | 5 | 9 |
| காஷமீர் | 12 | 7 | 19 |
| குறிக்கப்படாத இடம் | 2 | — | 2 |
| கோயம்புதூர் | 4583 | 3673 | 8256 |
| கஞ்ஜம் | 37 | 36 | 73 |
| கோதாவரி | 430 | 324 | 754 |
| கிருஷ்ணு | 993 | 389 | 1882 |
| கர்நூல் | 59 | 216 | 275 |
| மதுரை | 32,082 | 30,269 | 62351 |
| மலபார் | 1978 | 1658 | 3636 |
| சென்னை | 3700 | 2594 | 6294 |
| மைசூர் | 3695 | 2811 | 6506 |
| நெல்லூர் | 422 | 259 | 681 |
| நீலகிரி | 155 | 128 | 283 |
| வட ஆர்காடு | 8378 | 7314 | 15692 |
| புதுக்கோட்டை | 8374 | 7497 | 15871 |
| சேலம் | 18865 | 16102 | 34967 |
| தென் ஆர்காடு | 6520 | 5347 | 11867 |
| தென் கன்னடம் | 329 | 308 | 637 |
| தஞ்சாவூர் | 25962 | 22275 | 48237 |
| திருநெல்வேலி | 17333 | 14151 | 31484 |
| திருவிதாங்கூர் | 2869 | 2115 | 4984 |
| திருச்சிஞப்பள்ளி | 48790 | 44139 | 92929 |
| விசாகபட்டணம் | 327 | 280 | 607 |
| குறிக்கப்படாத இடம் | 14 | 4 | 18 |
| | 191.653 | 166.387 | 358,040 |

தோட்டமக்களில் ஆண்களில் 84.22 சதவீதப் பேர் இந்தியத்தமிழரும், பெண்களில் 87.57 சதவீதம் பேர் இந்திய தமிழ்ப்பெண்களுமாவார்கள்
Source: Ceylon at the Census of 1911 Pages 493 & 494

## V இலங்கைப் பிரதம மந்திரிகள்

| | | |
|---|---|---|
| திரு. | D. S. சேனநாயகா | 1948 — 1952 |
| ,, | டட்லி சேனநாயகா | 1952 — 1953 |
| ,, | சர் ஜோன்கொத்தலாவலை | 1953 — 1956 |
| ,, | S. W. R. D. பண்டாரநாயகா | 1956 — 26-9-1959 |
| ,, | W தஹநாயகா | 26-9-59 — 20-3-60 |
| ,, | டட்லிசேநாயகா | 20-3-60 — 21-7-60 |
| திருமதி | சிறிமாவோ பண்டாரநாயகா | 21-7-60 — 25-3-65 |
| திரு. | டட்லி சேநாயகா | 25-3-65 இந்நாள் வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AUTO PRINTER, COLOMBO-12.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org